12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

“NAM NADU” Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 21—5—1978 | இதழ் 36

பெரியார் - அண்ணா வாரிசுகள் யார்?

பெரியாருடைய பெயரை, அண்ணாவினுடைய பெயரை ஒரு தடவைக்குப் பத்துத் தடவை சொல்லி விடுகின்ற காரணத்தாலேயே, பெரியாருடைய கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள், அண்ணாவினுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் என்று அர்த்தம் ஆகாது.

பெயரைச் சொல்லுவதாலேயே நாம் அவர்களுடைய வாரிசு ஆகிவிட மாட்டோம். அவர்களுடைய கொள்கைகளை நாம் எந்த அளவிற்கு நிறைவேற்றுகிறோம், நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுகிறோம், அவைகளை எடுத்துச் சொல்வதற்காக எவ்வளவு இன்னல்களை ஏற்றுக் கொண்டோம், எவ்வளவு அடக்குமுறைகளைச் சகித்துக் கொண்டோம், எத்தனைமுறை சிறைச்சாலைக்குச் சென்றோம், எத்தனை போர்க்களங்களைக் கண்டோம் என்பதை எல்லாம் தயவுசெய்து நாம் எண்ணிப் பார்த்தால்தான் கொள்கைகளைப் பின்பற்றுகிறோமா அல்லது ஆட்களைப் பின்பற்றுகிறோமா என்கின்ற அந்த உண்மை, அந்தத் தெளிவு ஏற்படமுடியும்.

ஜனநாயகத்தினுடைய இலக்கணப்படி ஒரே கட்சியினுடைய ஆட்சி நீடிக்காமல் ஆட்சிகள் மாறி மாறி வருவது மக்களுக்குக்கூட நல்லது. வருகின்ற கட்சி ஒன்றைவிட ஒன்று திறமையுடையதாக இருந்தால் மக்களுக்கு மிகவும் நல்லது. ஆனால் புது ஆட்சி வந்த பிறகு நிழலின் அருமை வெயிலில்தான் தெரிகிறது என்று எண்ணுகிற அளவிற்கு ஆட்சி வந்துவிடுமேயானால் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம், நாம் செய்துவிட்ட தவறு ஜனநாயகத்தின்படி ஐந்து ஆண்டுகளுக்கு அனுபவித்துத் தீரவேண்டிய தவறாக ஆகிவிட்டதே என்று நமக்கு நாமே கவலைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

- கலைஞர்

சென்னை திருமணங்களில் (15 5 - 78)

அரும்பு

கருணாநிதி

திருக்குவளை கிராமத்திற்கே இந்தத் திருமணம் மிக மிகப் பதிது; பழமையிலேயே ஊறிப்போனவர்கள் ஏராளம் இங்கே; அறிவுப் பாதையிலே நடைபோட வேண்டுமென்ற ஆசை ஒரு பக்கம் இருந்தாலும் இறந்தகாலக் கொள்கைகளைவிடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அதிகம் நிறைந்த அழகான சிற்றூர்; அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும் ஆலயமணி— வான் முட்டும் கோபுரம் — எதிரே சிங்காரத் திருக்குளம்—கரையிலே தென்னைகளும் — திண்ணையுள்ள வீடுகளும்—தென்றலுக்கு ஏற்ற வகையில் தெற்கு நோக்கி அமைந்துள்ள அக்கிரகாரம் — இப்படியெல்லாம் சலை அழகோடு வைதீகக் கறைகளையும் நிறைந்திருக்கும் ஊரிலேதான் இந்தப் புதுமையான திருமணத்தை நான் செய்துகொள்ளப் போகிறேன் நண்பா! சென்னையிலிருந்து இந்த ஊர் அதிக தூரம்தான்; ஆயினும் நாம் இருவரும் மிக நெருங்கியவர்களாயிற்றே எப்படியும் அலுவலகத்தில் 'லீவு' பெற்றுக்கொண்டு வந்து தீரவேண்டும் — இது அன்பின் ஆணை' என்று கடிதத்தை முடித்தான் ரத்தினம்!

கோகுலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை! நாலைந்து ஆண்டுகளாக அவன் எந்தத்திருமணவிழாக்களுக்கும் போனதே கிடையாது

மகிழ்ச்சி பொங்கிடும் அந்த விழாவிலே தான் போய் சோகத்தின் உருவமாக உட்கார்ந்திருக்க அவனுக்கு விருப்பமில்லை; திருமண இதழைக் கண்டே 'திக் பிரமை' கொண்டவன்போல் உட்கார்ந்திருக்கும் அவனுக்கு திருமணத்தையும் நேரில் பார்த்துவிட்டால் எப்படி இருக்கும்?

அவனுக்கு நடைபெற்ற திருமணம் — அப்போது முழங்கிய மேளஒலி —மணமேடையில் இருந்தவாறே மனைவியிடம் காட்டிய குறும்பு அவள் அதை ரசித்து மகிழ்ந்த மென்மை — தொடர்ந்து துவங்கிய இன்ப புரிப் பயணம் — பின்னர் வந்த அன்புச் சின்னம்—திடீரென வாழ்வில் வீசி விட்ட புயல்—நீங்கா நித்திரைக்கு ஆளாக்கி விட்ட அவன் துணைவி—அம்மாவை இழந்த அருமை மகன்—இந்த நிகழ்ச்சிகளும், காட்சிகளும் அவன் மனக்கண்முன்னே படையெடுத்து வரும்; அதற்காகவே, திருமணங்களுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டான்!

இப்போதோ, தட்ட முடியாத அழைப்பு வந்து விட்டது; இரத்தினமும் அவனும் இணை பிரியாத நண்பர்கள்; அவன் திருமணத்திற்குப் போகவில்லையென்றால் ... கோகுலுக்கு அதை நினைக்கவும் இயலவில்லை .. இரண்டொரு நாட்கள் குழப்பத்திற்கு பிறகு இரத்தினத்தின் திருமணத்தில் கலந்துகொள்வது என்று முடிவு செய்தான்.

ஃ ஃ ஃ

இரத்தினத்தின் திருமணம் புதுமை முறையிலே நடைபெற்றது; 'அந்த வட்டாரத்திலேயே மிகப்புதிய திருமணம்' என்று அவன் கோகுலுக்கு எழுதியிருந்தது உண்மைதான்; ஊர்மக்கள் எல்லாம் — அழைப்பில்லாதவர்கள் கூட — அந்த அதிசய திருமணத்தைப் பார்க்கத் திரண்டிருந்தனர்!

புரோகிதர் — ஓமகுண்டம்— அம்மி—அரசாணி—எதற்கும் வேலையில்லாமல் வந்திருப்போரின் அன்பை மட்டுமே சாட்சியாகக் கொண்டு, அறிவு முறையிலே திருமணம் நடைபெற்றது.

கோகுல், மாப்பிள்ளைகோலத்திலே தன் நண்பனைக் கண்டான்; அடக்கிவைத்திருந்த துக்கம் அணை உடைத்துக் கிளம்ப முயன்றது — சமாளித்துக் கொண்டான்; நண்பனது வாழ்க்கை ஒப்பந்த விழா— அதிலேதான் இப்படி நடந்து கொள்வது சரியல்ல என்று அவனுக்குத் தெரியாமலில்லை!

தலைவரின் முன்னுரைக்குப்பின் அனைவரின் வாழ்த்துரைகளோடு மணமகனும்—மணமகளும் மாலை சூட்டிக் கொண்டனர்!

கோகுலின் திருமணம் இப்படி நடக்கவில்லை: அக்கினி அருந்ததி சாட்சியாக நடைபெற்றது: அந்தத் தெய்விகத் திருமணத்தையும் — தன் மனைவியின் உயிரைப் பிடித்துக்கொள்ளத் திராணியற்ற அந்தத் தெய்வங்களையும் நினைத்துக் கொண்டான்: அவனாகவே சிரித்துக்கொண்டான்!

திருமணம்முடிந்து விருந்து முதலிய நிகழ்ச்சிகளும் நல்ல முறையில் நடந்தேறின; கோகுல், நண்பனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்னைக்குத் திரும்பத் தயாரானான். விடையளித்து வழியனுப்பும்போது இரத்தினம் அவனைப் பார்த்து "கோகுல்—எத்தனை நாளைக்கு இப்படியே இருந்துவிட எண்ணுகிறாய்? சென்றதை மறந்து விட்டு இன்னொரு திருமணத்திற்கு ஏற்பாடு செய் நீ என்ன இப்போதும் கிழவனாகவா ஆகிவிட்டாய்? என்று உபதேசம் செய்யத் தொடங்கினான்

கிழவனாகவும் ஆகிவிடவில்லை— திருமணமே இனி வேண்டாம் என்று ஞானியாகவும் மாறிவிடவில்லை; ஆனால், குழந்தை குமார் இருக்கிறான்; வரப்போகும் புதிய தாயார் அனுக்கு ஒரு கிரசனமாகிவிட்டால் என்னப்பா செய்வது?' என்று கண்ணீருக்கிடையே கூறினான் கோகுல்! நீண்ட நேர உரையாடலுக்குப் பின் எந்த முடிவுமில்லாமலே இருவரும் பிரிந்தனர்!

'திருக்குவளைக்கு ஆறு மைல் அப்பாலுள்ள அம்மனூர் சென்றால் புகைவண்டியில் செல்வதற்கு வசதியாக இருக்கும்' என்று கூறி, கோகுலை ஒரு இரட்டை மாட்டு வண்டியிலேற்றி விட்டிருந்தான் இரத்தினம். இரயில் வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகவே இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தான் கோகுல்; வந்த வண்டிக்காரனும் திரும்பிப் போய் விட்டான்; அந்தச் சிறிய இரயிலடியில் பேச்சுத் துணைக்குக்கூட ஆள் கிடைக்கவில்லை, அங்குமிங்கும் உலவிக் கொண்டே இருந்தான் தனிமையின் தோழனைச் சிகரெட்டையாவது தேடுவோமென்று பக்கத்தில் விசாரித்தான்; 'அதோ' என்று கைகாட்டி விட்டுப் போனார்கள் ஊர்க்காரர்கள்!

இருட்டிலே மினுக் மினுக்கென்று வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கும் அந்தச் சிறிய கடையை நோக்கி அவன் போனான்; கடை இருந்தது — ஆனால் வியாபாரம் செய்யும் ஆள் யாரையும் காணோம்; ஒரு சிறிய வீட்டுத் திண்ணையிலே அந்தக் கடை இருந்த காரணத்தால், 'கடைக்காரர் உள்ளே இருப்பார்' என்று நினைத்து, 'யார் கடையிலே? என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

'யாரது ..... என்ன வேணும்?' என்று கேட்ட வண்ணம், அழகுமிக்க யுவதி ஒருத்தி வெளியிலே வந்தாள். மங்கலான வெளிச்சத்திலும் அவள் முகத்தை பார்க்க அவனால் முடிந்தது; 'அப்படிப் பார்ப்பது முறையல்ல' என்ற எண்ணம் ஏற்படவே, 'சிகரெட் வேணும்' என்று தயங்கிய குரலில் கேட்டான்.

அவள் சிகரெட்டைத் தேட ஆரம்பித்தாள். தேடுவதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சியின் போது, அவளது உடலிலே ஏற்பட்ட இலாவகமான வளைவுகளை அவனால்பார்க்காமல் இருக்க முடியவில்லை. பட்டணத்துப் பெண்கள் நட்டுவனார் வைத்துப் பாடம் கேட்டும் கற்றுக் கொள்ளாத அபிநய அசைவுகளை, இயற்கையாகவே அவள் பெற்றிருந்தாள், அதைக் கண்ட கோகுலுக்கு அதிசயமாகவே இருந்தது!

மங்கை சிகரெட்டைத் தேடி எடுத்தாகவில்லை — அதற்குள் பயங்கர இருமல் சத்தம் கேட்டது; அவள் சிறிது தயங்கி உள்ளே திரும்பினாள்; மீண்டும் இருமல் பலமாகக் கேட்டது.

சிகரெட்டைத் தேட அவளால் இயலவில்லை, கோகுலைப் பார்த்து தயவு செய்து நீங்களே சிகரெட்டைத் தேடி எடுத்துக் கொண்டு காசைப் பெட்டியிலே போட்டு விடுங்கள் என்று கூறிவிட்டு —

[6-ம் பக்கம் பார்க்க]

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் பட்டியல்

வருகிற 28-5-78இல் நடைபெற விருக்கும் மாவட்டக் கழகத் தேர்தலுக்கான—செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் பட்டியல் — முகவரிகள் விவரம் வருமாறு :—

கும்மிடிப்பூண்டி ஒன்றியம்

செயலாளர் :

சி. வேணு, 190 பனபாக்கம், கவரைப்பேட்டை அஞ்சல், கும்மிடிப்பூண்டி வட்டம், செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

எம். சுப்பிரமணியம், ஜி என். டி. ரோடு கும்மிடிப்பூண்டி வட்டம் அஞ்சல், செங்கை மாவட்டம்.

பி. எஸ். நடராசன், புதுவடல், போஸ்ட், கும்மிடிபூண்டி வட்டம், செங்கை மாவட்டம்.

இ. எஸ். கோபாலகிருஷ்ணன், ஆரம்பாக்கம் அஞ்சல். குமிடிபபூண்டி வட்டம், செங்கை மாவட்டம்.

திருவாலங்காடு ஒன்றியம்

செயலாளர் ;

வி. சங்கரன், அருங்குளம் போஸ்ட். திருத்தணி வட்டம், செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ஏ. சாமுவேல். ஒரத்தூர் பாதசாலை அஞ்சல், (வழி) திருவாலங்காடு திருத்தணி வட்டம், செங்கை மாவட்டம்.

இரா. தண்டபாணி, மணவூர் அஞ்சல், (வழி) திருவாலங்காடு, திருத்தணி வட்டம், செங்கை மாவட்டம்;

எஸ் கே. கோவிந்தசாமி, குப்பம் கண்டிகை, மணவூர் அஞ்சல், திருத்தணி வட்டம, செங்கை மாவட்டம்.

திருப்பெரும்புதூர் ஒன்றியம்

செயலாளர் :

கே. நடராசன், சிறுமாங்காடு கிராமம், சுங்குவார் சத்திரம் (வழி)

மாவட்டப் பிரதிநிதிகள் ;

வி. ஏழுமலை, இராமாநுஜபுரம் கிராமம், எடையார் பாக்கம் வழி, மேல்மதுர மங்கலம் போஸ்ட்.

வி. வி. கே. சாமி, சுங்குவார் சத்திரம்—602 107, திருப்பெரும்புதூர் (வழி)

மா. தா. சானகிராமன், 89, மாகாண்யம் கிராமம், மணிமங்கலம் போஸ்ட், படப்பை, (வழி)

திருப்போரூர் ஒன்றியம்

செயலாளர்.

கே. பரசுராமன், இள்ளலூர் போஸ்ட், பின்கோட்—603 110.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

தி. மு. கந்தசாமி, 60, திருவண்ட மாடவீதி, திருப்போரூர் போஸ்ட், பின்கோட் —603 110.

பலராமன், எம்.பி., மடைபத்தூர் கிராமம், செம்பாக்கம் போஸ்ட், பின்கோட்—603 108.

வடிவேலன், கே. ஆர். கேளம்பாக்கம், பின்கோட்—603 103.

குன்றத்தூர் ஒன்றியம்

செயலாளர்,

மூ. கி. முனுசாமி, மூன்றுங்கட்டளை, கோவூர் அஞ்சல், (வழி) மாங்காடு, பின்கோட் —600 056.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

டி. சுப்ரமணியம், 1-25ஏ, பழைய பஜார் தெரு, மேல் படப்பை, படப்பை போஸ்ட், (வழி) தாம்பரம்—601 301.

க. மு. பஞ்சாட்சரம், சலிட்டிபேட்டை, சிறுகளத்தூர் அஞ்சல், குன்றத்தூர் (வழி(—600 069.

இரா. பொன்னுவேல், எருமையூர், திருமுடிவாக்கம் அஞ்சல், (வழி) குரோம்பேட்டை, சென்னை—600 079.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்

செயலாளர்,

ஏ. ஜே. கண்ணபிரான், அருங்கால் கிராமம், காரணைபுதுச்சேரி அஞ்சல், (வழி) கூடுவாஞ்சேரி, செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ச ஆதிமூலம் (முகவைமுரசன்) மன்னிவாக்கம். மன்னிவாக்கம் அஞ்சல்,(வழி) வண்டலூர், செங்கை மாவட்டம்.

கமலக்கண்ணன், நின்னக்கரை, நின்னக்கரை அஞ்சல். (வழி) காட்டாங்கொளத்தூர் செங்கை மாவட்டம்.

வ. ருத்திரக்கோட்டி, திம்மாவரம், செங்கற்பட்டு அஞ்சல், செங்கை மாவட்டம்.

உத்திரமேரூர் ஒன்றியம்

செயலாளர்,

இரா. நாகன், துழம்பர கோயில் தெரு, கம்மாளத் தெரு உத்திரமேரூர்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ஆர். சாரங்கன், ஆர். எஸ் மிதிவண்டி நிலையம், கடை வீதி, உத்திரமேரூர். செங்கை மாவட்டம்.

ச. பெருமாள், 5, கடை வீதி, உத்திரமேரூர், செங்கை மாவட்டம்.

சி.வி.சுப்பிரமணியம், பெருநகர் அஞ்சல் நிலையம், உத்திரமேரூர், செங்கை மாவட்டம்.

வில்லிவாக்கம் ஒன்றியம்

செயலாளர்,

வி. து. லோகநாதன்' ஆற்காட்டுச் சாலை, சென்னை—600 092.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

பி கே. இராசகோபால், தெரு வீதியம்மன் கோயில் தெரு சென்னை—700 096.

ஆ. பாபு, பெருமாள் அகரம், சென்னை - 600 053.

வி. பி. அகிலன், ஆற்காட்டுச் சாலை, சென்னை—600 092.

சோழவரம் ஒன்றியம்

செயலாளர்,

பி. ஏழுமலை, 2-131பி. ஞா. தேவநேயப்பாவாணர் தெரு, மொண்டியம்மன் நகர், செங்குன்றம் போஸ்ட், சென்னை—600 052.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

வெற்றிவீரன் மிஷன் காம்பவுண்டு, ஆரணி, பொன்னேரி தாலுக்கா, செங்கை மாவட்டம்.

சம்பந்தம், 78, ஆமூர் கிராமம், ஆமூர் போஸ்ட், பொன்னேரி தாலுக்கா, செங்கை மாவட்டம்.

ரோசையன், புதுக்குப்பம், ஞாயிறு அஞ்சல் பொன்னேரி தாலுக்கா, செங்கைமாட்டம்.

மாதவரம் ஒன்றியம்

செயலாளர்,

பா. மதிவாணன், அ. பொ. அரசு தெரு, மூலக்கடை, சென்னை—600 060.

மாவட்டப் பிரதிநிதிகள் -

மா. துரைசாமி, 18, பிள்ளையார் கோவில் தெரு, செங்குன்றம, சென்னை—600 052.

பி. கிருட்டிணன், 9. மேட்டுத் தெரு, ஆர் வி நகர் பி ஓ. தொடுங்கையூர், சென்னை—600 051.

இரா. துரைபாபு, 2-2, பெருமாள் கோயில் தெரு, சிங்லிமேடு கிராமம், விளாங்காடுபாக்கம் அஞ்சல், சென்னை — 600 052.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியம்

செயலாளர்,

ஓ பி செல்லப்பா, ஒரத்தி, அஞ்சல் செங்கற்பட்டு மாவட்டம், திண்டிவனம் ஆர். எம். எஸ்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

வெ. செல்லப்பெருமாள், திம்மாபுரம் கிராமம், மதூர் (அஞ்சல் நிலையம்) அச்சரப்பாக்கம், செங்கை மாவட்டம்.

வி. முனுசாமி, 63, பள்ளி பேட்டை, அச்சரப்பாக்கம் (அ நி.) செங்கை மாவட்டம்.

கா. சு. தனபால், எலப்பாக்கம், எலப்பாக்கம், அஞ்சல், செங்கை மாவட்டம்,

கடம்பத்தூர் ஒன்றியம்,

செயலாளர்,

பொ. நடராசன், வெங்கத்தூர் கண்டிகை, மேல்நல்லாத்தூர் அஞ்சல், திருவள்ளூர் ஆர். எஸ்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

கோ. திராவிடபக்தன், ஒண்டிகுப்பம், மணவாள நகர் அஞ்சல், திருவள்ளூர் ஆர்.எஸ்.

சு அருணாசலம். புதுமாவிலங்கை அஞ்சல், கடம்பத்தூர் வழி.

ந. மி. அருளடியார், கம்மாவார்பாளையம், பண்ணூர் அஞ்சல்—602 108.

காஞ்சிபுரம், ஒன்றியம்

செயலாளர்,

பி முருகேசன், மேல்ஒட்டிவாக்கம் கிராமம், முசரவாக்கம் அஞ்சல், காஞ்சிபுரம் வட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

எம். கே. கோபாலகிருஷ்ணன், முட்டைவாக்கம் கிராமம், பாலு செட்டி அஞ்சல், காஞ்சிபுரம் வட்டம்,

மு. சீனிவாசன், வெங்கடாபுரம் கிராமம், செவிலிமேடு அஞ்சல், காஞ்சிபுரம் வட்டம்.

ஆ சுப்பிரமணியம், செவிலிமேடு கிராமம, செவிலி மேடு அஞ்சல், காஞ்சிபுரம் வட்டம்.

இலத்தூர், ஒன்றியம்,

செயலாளர்,

சு. சொர்ணம், கடலூர் கிராமம், கடலூர் அஞ்சல, மதுராந்தகம் வடடம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

எம். பழனி, குடியானவர் வீதி, செய்யூர், செய்யூர் அஞ்சல், மதுராந்தகம் வடடம்.

எம். எம். ஏழுமலை- முகையூர் கிராமம், முகையூர் அஞ்சல், கூவத்தூர் வழி, மதுராந்தகம் வட்டம்.

ஜி. பாலகிருட்டிணன், வடக்கு வீதி, செய்யூர்; செய்யூர் அஞ்சல், மதுராந்தகம் வட்டம்.

பரங்கிமலை, ஒன்றியம்,

செயலாளர்,

மு கோதண்டராமன், 40. வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, பெருங்குடி அஞ்சல் சென்னை — 600 096.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

த. டில்லி, 70, முட்டுக்காடு சாலை, பாலவாக்கம், திருவான்மியூர் அஞ்சல், சென்னை-600 041.

கே. ஹென்றி தசரதன், 26-3, வேளச்சேரி மெயின் ரோடு 150, மேடவாக்கம விலேஜ் போஸ்ட், சென்னை-600 073

எம். வி. வேலு, 1, வெங்கடசாமி ரெட்டி தெரு, பீர்கன் கரணை, சீனிவாசநகர் அஞ்சல், சென்னை-63

பள்ளிப்பட்டு ஒன்றியம்

செயலாளர்:

என். கே. எஸ். கணேசன், பொதட்டூர் பேட்டை, செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

பி. மாணிக்கம், 38 மெயின் தெரு. பள்ளிப்பட்டு, செங்கை மாவட்டம்.

எ சிவலிங்கம், அத்திம்மாஞ்சேரி பேட்டை, செங்கை மாவட்டம்.

சி. நாகரத்தினம், பாண்டாவேடு, வழி — பொதட்டூர் பேட்டை. செங்கை மாவட்டம்.

திருவள்ளூர் ஒன்றியம்.

செயலாளர்;

நா. வணங்காமுடி, 61, வள்ளுவர்புரம், திருவள்ளூர்.

மாவட்டப் பிரதிநிதிகள்;

எஸ். சொக்கலிங்கம், 162, புல்லரம்பாக்கம் கிராமம், புல்லரம்பாக்கம் அஞ்சல், திருவள்ளூர் வட்டம்.

டி. தேவதாஸ், பஜனை கோவில் தெரு, தொழுவூர், திருவள்ளூர் வட்டம்.

பி. துரைசாமி. காக்கனூர், காக்கனூர் அஞ்சல், திருவள்ளூர் வட்டம்.

மதுராந்தகம் ஒன்றியம்,

செயலாவர்;

பி. சிவானந்தம், 15, பஜனை கோவில் தெரு, மதுராந்தகம்.

மாவட்டப் பிரதிநிதிகள்:

ஓ சேவியர், 220, புதூர் போஸ்ட் மதுராந்தகம்.

வெ. சுந்தரேசன் வெராலூர், பெரிய வெண்மணி போஸ்ட், மதுரர்ந்தகம் தாலுக்கா, செங்கை மாட்டம்

அ வேலு, தொன்னாடு, நீர்ப்பெயர் போஸ்ட், மதுராந்தகம் ஒன்றிபம், செங்கை மாவட்டம்.

வாலாசாபாத் ஒன்றியம்

செயலாளர்,

சீனிவாசன், டி. 80-பி, பெரியகம்மாளத் தெரு, காஞ்சிபுரம்-2.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

எம். ஏகப்பன், ஈஞ்சம்பாக்கம் கிராமம், காரை அஞ்சல், காஞ்சி வட்டம், செங்கை மாவட்டம்.

டி. கெங்காதரன், வடக்கு தெரு, ஐயம்பேட்டை (எஸ்.ஓ) காஞ்சி வட்டம், செங்கை மாவடடம்.

என். ஆர். முனிரத்தினம், தென்னேரி கிராமம அஞ்சல், காஞ்சி வட்டம், செங்கை மாவட்டம்.

சித்தாமூர் ஒன்றியம்

செயலாளர்,

மு. சு பிரமணியன், மேலமருவத்தூர், சோத்துபபாக்கம போஸ்ட், மதுராந்தகம் தாலுக்கா, செங்கை மாவட்டம.

மாவட்டப் பிரதிநிதிகள் -

கே. பொன்னுசாமி கோட்டைக்காடு போஸ்ட், (வழி) கடப்பாககம், மதுராந்தகம தாலுக்கா, செங்கை மர்ட்டம் பின்கோட்—603 304.

கே. டி. மணி, கயப்பாக்கம் போஸ்ட், அச்சரப்பாக்கம், மதுராந்தகம் தாலுக்கா: செங்கல்பட்டு மாவட்டம்.

எம். இராமலிங்கம்' வெடால் போஸ்ட், (வழி) குணம்பேடு, மதுராந்தகம் தாலுக்கா, செங்கை மாவட்டம்.

பூவிருந்தவல்லி ஒன்றியம்

செயலாளர்,

வி. டி. பால்ராசு. பர்வத

(11ம் பக்கம் பார்க்க)

வலுவான அரசா? வளமான நாடா?

மத்திய அரசு வலுவானதாக இருக்க வேண்டும் என்ற நியாயம் ஏதோ ஒரு தாரக மந்திரம்போல, இந்திய அரசின் அதிகாரக் குவியலுக்கு ஆதரவு காட்டும் எல்லாத் தரப்பினராலும் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. பொதுவாக எல்லா அரசுகளும் வலுவானதாகத்தான் இருந்தாக வேண்டும்; இல்லையென்றால் அவை நிலையான அரசுகளாக இருக்க மாட்டா!

ஆனால் ஓர் அரசின் வலிமை என்பது என்ன? அதன் அடையாளம் என்ன? காவல்துறையின் கெடுபிடிகளில் அல்லது ஆட்சியின் ஆதிக்கப் போக்கில் காணப்படுவது 'வன்மை' அல்ல; அது அட்டூழியத்தின் பாற்படும்!

ஒரு நாட்டின் உண்மையான பொருளாதார வளப்பமே அந்த நாட்டிற்கு வலுவைத் தருகிறது என்பதே இன்றைய உலகின் நடைமுறை. வளமற்ற நாடு வலுவானதாக விளங்குதல் ஒருபோதும் இல்லை; சில நேரங்களில் இராணுவ பலம் அப்படி ஒரு போலித் தோற்றத்தை ஒரு நாட்டுக்கு உண்டாக்கலாம்; ஆனால் அது வீண் பிரமையே! வறிய பின்னணி எவ்வளவு வலிய இராணுவத்தையும் வலுவிழக்கச் செய்துவிடும்!

அப்படியானால் இந்திய அரசு வலுவானதாக இருக்க வேண்டும் என்ற கூப்பாட்டுக்கு என்னதான் பொருள்? அது அந்தக் குரல் எழுப்புவோருக்குத்தான் வெளிச்சம்!

முதலில் இந்திய நாடு என்பது என்ன? அதற்கென்று தனியாக ஒரு பரப்பளவு உண்டா? எல்லா மாநிலங்களும் ஒன்றாகப் பிணைந்தது இந்தியா!

மாநில மக்கள் தரும் இரண்டாவது வாக்குச் சீட்டால் உருவாக்கப்படுவது மத்திய அரசு!

மாநில மக்கள் வழங்கும் வரியால் கொழுப்பது அதன் நிதி ஆதாரம்!

அது நடத்தும் இரயில் போக்குவரத்து இழப்பில் நடக்கிறது!

அதன் அஞ்சல் — தந்தித்துறை மக்கள் வரிப்பணத்தைச் சுரண்டும் சுமை!

பொதுப் பணத்தை ஏராளமாகக் கொட்டி — நாட்டின் பல பகுதிகளில் மத்திய அரசு நிறுவியிருக்கும் பொதுத்துறை தொழில் நிறுவனங்கள் பெரும்பாலும் நஷ்டத்தில் நடக்கின்றன!

மத்திய அரசின் அயல்நாட்டு உறவுத்துறை இந்தியைப் பரப்பப் பயன்படும் பாடசாலை! உறவை வளர்க்க ஓரளவுக்கே பயன்படுகிறது!

மத்தியின் கீழுள்ள வானொலியும் தொலைக்காட்சியும் நாட்டின் பரந்துபட்ட தனித் தன்மைகளை அழித்து, ஆரியக் கலாச்சாரத்தையும், வேதப் பண்பாட்டையும் நாட்டில் நிலைநிறுத்தப் பாடுபடும் ஆதிக்கச் சின்னங்கள்!

இந்திய அரசின் பொறுப்பிலுள்ள தேசிய வங்கிகள், தனியார்துறைக்கு வளமூட்டும் கற்பகத் தருக்கள்!

வெளிநாட்டு வர்த்தகமோ தனியார் முயற்சியால் ஏதோ ஓரளவுக்கு நடைபெறும் மந்த வியாபாரம்! அதிலும் பல அரசுத்துறை வர்த்தக நிறுவனங்கள் புகுந்து கொள்ளை ஆதாயத்தைக் குறிக் கொண்டு இயங்கும் நிலை!

இவற்றைத் தவிர மத்திய அரசு இந்த நாட்டில் செய்வது என்ன? மாநில

அரசுகள் எப்படி இயங்க வேண்டும் என அடிக்கடி அறிவுரை வழங்க ஒரு மத்திய அரசு தேவைதானா? அதைச் செய்யத் தானே மாநில சட்டமன்றங்கள் உள்ளன!

இன்றுள்ள நிலையில் தவிர்க்க முடியாத நிலை ஒருங்கிணைப்புப் பணிகளும், நாணயச் செலாவணியில், அயல்நாட்டு வணிகம் மற்றும் உறவும் போன்ற சில பொறுப்புகளை மட்டும் மைய அரசு வைத்துக்கொண்டு ஏனைய அனைத்தும் மாநிலங்கள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் மாநிலங்களின் திறமைக்கும், உணர்வுக்கும், தேவைக்கும் தாங்கும் சக்திக்கும் ஏற்பத் திட்டங்களை தீட்டிச் செயல்படுத்திட இயலும். ஒவ்வொரு அரசும் அதிகப் பொறுப்புகளுக்கு ஏற்ப நிதி ஆதாரங்களைப் பெருக்கி பிற மாநிலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு முன்னேற வழிபிறக்கும்!

ஆனால் இன்றோ? சுய முயற்சிக்கு இடம் இல்லை! டில்லியின் புட்டிப் பாலுக்கு ஒவ்வொரு மாநிலமும் ஏங்கி நிற்கிறது! தாம் வஞ்சிக்கப்படுவதாக ஒவ்வோர் அரசும் சரியாகவோ தவறாகவோ டில்லியின்மீது குறைபட்டுக் கொள்கிறது!

அவ்வாறு குறைபடுவதில் நியாயம் இல்லாமல் இல்லை. சுமார் பதினைந்தாயிரம் கோடிக்குமேல் வருவாயைப் பெறும் மைய அரசு, அதில் பெரும் பகுதியை நேரடியாக மக்கள் நலன் நாடும் திட்டங்களுக்கு ஆக்காமல், நிர்வாக யந்திரத்தை இயக்கவே செலவிட்டு விடுகிறது! தேவையற்ற அந்த யந்திரமோ தனக்குப் பொறுப்பும் இல்லாத காரணத்தால், மாநில ஆட்சியைக் குறைகாணும் பாணியிலேயே தம் நேரத்தையும் நினைப்பையும் செலவிடுகின்றன!

மாநில ஆட்சியில் செயல்படும் ஓர் அதிகாரி மைய அரசில் பணியேற்க நேர்ந்தால், அவர் உடனே எல்லா மாநில ஆட்சிகளுக்கும் தாக்கீது அனுப்பும் அதிகாரியாக ஆக்கப்படுகிறார்! உலகிலேயே இந்தியாவில் மட்டும்தான் இந்த விசித்திரம் நடக்கிறது!

அவரே மீண்டும் தம் பழைய இடத்துக்கு மீளும்போது, தான் விட்ட இடத்தைப் பிடித்துக் கொண்ட இன்னொரு புத்திசாலியிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றுப் பதில் அறிந்து கொண்டு இருக்கிறார்!

டில்லி எதைச் சொன்னாலும் அதற்குக் கீழ்படிந்தாக வேண்டும். கீழ்படிய மறுத்தால் மத்திய உதவி கிடைக்காது!

தமது பணத்தை டில்லிக்கு அனுப்பி விட்டு அங்கிருந்து தாக்கீதுகளை மட்டும் பெற்றுக் கொண்டு இருக்கின்ற அடிமை நிலை நீடிக்கின்ற வரை இந்த நாட்டில் பொருளாதார வளர்ச்சி என்பது கானல் நீராகவே இருக்கும்!

மாநில அரசுகள் முழு முயற்சியோடு தொழில்துறையில் நாட்டம் செலுத்த வாய்ப்பும் வசதியும் பெற்றுத் திகழுமேயானால், இந்திய நாடு விரைந்து பொருளாதாரத்தில் வளம்பெற வழியுண்டு.

வளத்தைப் பெறும் நாடு வலுவைத் தன்னாலே பெற்று வருகிறது!

எனவே மைய அரசு வலுவாக இருப்பதற்கு இந்தியநாடு வளமாக இருக்க வேண்டும். இந்தியநாடு வளமாக இருப்பதற்கு, அந்த நாட்டில் நலியும் மாநிலங்கள் போதிய உரிமை பெற்று பொருளாதார வளப்பத்திற்குத் திட்டமிடுதல் வேண்டும். நாட்டின் வளம் பெருகி, மக்களின் நலம் நிறைந்தால் நாடு பிறருக்கு அஞ்சாத வன்மையைத் தன்னாலே பெற்றுத் திகழ வழியுண்டு!

அதைவிடுத்து மைய அரசு வலுவோடு இருக்க வேண்டும் என்ற வறட்டுக் கூச்சல், அதிகாரக் குவியல்களுக்கு மட்டும் பயன்பட்டு மாநிலங்கள் செயல்பட வழியின்றி வாட்டப்படுமானால், மக்கள் வறுமைக் கோட்டினின்றும் நகர வழியின்றி அல்லலுறும் நிலையில், பெருஞ்செலவில் பராமரிக்கப்படும் இராணுவம் ஒரு நோயாளியான நாட்டின் வீக்கமாக இருக்குமே தவிர, ஒரு வளமான நாட்டின் பலம் வாய்ந்த ராணுவமாக அது என்றும் ஆதல் இயலாது!

★

நடிப்பவரும் -- துடிப்பவரும்!

வேலைப் பிடித்த வேலவனை வணங்குதலே வேலையென்று வாழுளை வீணாக்கிய பக்தர்கள் உண்டு. கோலைப் பிடித்து ஆட்சி செய்வதைக் காட்டிலும் சிற்றிடைச் சிங்காரியரின் சேலை நுனி பிடித்து காலைப் பிடித்து களித்துக் கிடந்த காமுகர்கள் கண்டு. காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோய் வாய்ப்பட்டோர் உண்டு. நூலைப் படிப்பதுவே வேலையென்று வாழ்ந்த நுண்மாண் நுழைபுலத்தோர் உண்டு. ஆலைச் சங்கொலி கேட்டு வேலைக்குச் சென்று மாலையில் திரும்பும் மனிதர்கள் உண்டு, சாலை ஓரத்திலே வேலையற்று சேலை நிகர்த்த விழி மாதர் சேலை காண காத்திருக்கும் இளைஞர் உண்டு. விந்தை மாந்தர் தம் வரிசைக்கு முடிவேது? அன்னவர் சிந்தைக் குழப்பம் நீங்கிட-செயலார்வம் ஓங்கிட வழியேது?

வேலைப் பிடித்தென்ன? வெண்ணீறு அணிந்தென்ன? வேலைக்குப் போகாமல் வெட்டிப் பேச்சிலே நேரத்தை வீணாக்கும் காளைக்கு மதிப்பு இருக்குமா? நாளை வரும் நல்ல வேளை யென்று காலத்தைக் கடத்துவதால் நாட்டில் நற்பணிகள் விளைந்திடுமா? வேலைக்கு சென்றாகவேண்டும். வேலை விரும்புவோர்க்கு ஓரசு வேலை தந்தாக வேண்டும். வெட்டிப் பேச்சை தட்டி நடக்கும் வீரமும் வீண்வம்பை விலகி நில் என்று விரட்டும் திரமும் இக்கால இளைஞர்க்கு வேண்டும் என்று வியன் தமிழ் வித்தகர் அண்ணா எழுதினார். சாலை ஓரத்திலே கிடக்கும் வேலையற்றவர்கள்-வேலையற்றவர்கள் உள்ளத்திலே வளரும் விபரீத எண்ணங்களைப் பற்றி அண்ணா வேதனைப் பட்டார். வேலை இன்மைக் கொடுமைக்கு விடை தந்தாகவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். வேலை வாய்ப்பைப் பெருக்கியாக வேண்டிய பொறுப்பில் அரசு இருக்கின்றது. இக் கொடுமைக்கு முடிவு கட்டாமல் கூத்தடிக்கத் துடிப்போரிடம் ஆட்சிக் கோல் இருக்கிறது. கடமையைச் செய்யாமல் களியாட்டத்திலே ஈடுபடத் துடிப்போர் நாட்டின் காவலர்களாகி விட்டார். தேவை வேலையென்று தெருவோரத்தில் திரியும் இளைஞர்க்கு வழி காட்டாமல் திரையில் பூவை உடல்தேவையென்று திருநாட்டை ஆள வந்தவர் ஓடி விட்டார். பணிகளை மறந்து விட்டு நாட்டு நிலை மாற்ற ஆற்ற வேண்டிய கடமைகளை துறந்து விட்டு கலையார்வம் என்று 'கலை'கள் ஓடி திற்கும் காலத்தில் வாழ்கின்றோம். மூடப் பழக்கங்களாலே முன்னேற முடியாமல் முடங்கிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயம் அறிவொளியின் கீழ் தொடங்கியுள்ள பயணம் வெற்றி எய்த தி. மு. கழகத்தின் வழி காட்டுதல் காலத்தின் தேவையாகி இருக்கின்றது.

விதியாலேதான் வேலை கிடைக்கவில்லை என்று விளக்கம் தரப்பட்ட மண்ணில் மதியாலே நிலைமைகளை மாற்றலாம் எழுந்து வா! எழுச்சி கொள் என்று இளைஞர்க்கு புத்தெழுச்சி ஊட்ட வேண்டிய பொறுப்பு தி. மு. கழகத்திற்குத்தான் இருக்கின்றது.

போதிய நிதி இல்லையே-பொற்றமிழர் நாட்டில் வேலை வாய்ப்பைப் பெருக்க போதிய அதிகாரம் இல்லையே என ஆண்ட நாளிலேயே கவலைப் பட்ட அறிவியக்கம் தி. மு. கழகமே! கூடுதல் அதிகாரம் வேண்டும்—மத்தியில் குவிந்துள்ள அதிகாரம் பரவலாக்கப் பட வேண்டும் என்ற குரலை தி. மு. கழகம் எழுப்பியதன் நோக்கமே இளைஞர்க்குரிய வேலை வாய்ப்பை பெருக்க இயன்றதை உடன் செய்தாக வேண்டும் என்ற உந்துதலால் தான்!

சேலம் இரும்பு சிறைப்பட்டு கிடந்த காலத்தில் அதனைச் செய்து முடிக்கும் செயலார்

· நந்திவர்மன் ·

வம் அற்ற மத்தியிலே உள்ளோர் தூங்கிக் கிடந்த காரணத்தால் ஏங்கிக் கிடந்த எத்தனையோ இளைஞர்க்கு வேலை வாய்ப்பு கிட்டாமல் போயிற்று.

சேது சமுத்திரத் திட்டம் பற்றி காது கொடுத்துக் கேளாமல் மத்தியிலே உள்ளவர்கள் காலம் கடத்திய காரணத்தால் வேலையற்றோர் தொகை வளர்ந்தது. தொடங்க வேண்டிய தொழில்கள் முடங்கிக் கிடந்தன. தொடர வேண்டிய பணிகள் தொய்வடைந்து நின்றன. எல்லாமே எல்லாரும் பெற்று விட்ட சமுதாயத்தில் மெத்தனமாக இருப்பதை பொறுத்துக் கொள்வது தவறில்லை. ஆனால் இல்லாமை இடர்படுத்தும் நாட்டில் இயலாமை—இயன்றதைச் செய்ய முயலாமை பெருங் குற்றமே!

பத்தாண்டில் வேலை அனைவர்க்குமென்று பாரதப் பிரதமர் தேசாய் சொன்னது விடுதலை பெற்றால் பாலாறும் ஓடும் என்பது என்னவாயிற்றோ அதே கதியைத்தான் அடையும்போலிருக்கிறது. கூடாது இக்கொடுமை; இனி நீடித்தல் கூடாது; தேன்பாகுச் சொல்லால் திசை திருப்பும் போக்கு இனித் தொடரலாகாது! திட்டமிட்டாக வேண்டும்! தெளிந்தாய்ந்தது திண்மையோடு செயல்பட்டாக வேண்டும். ஏனைய நாடுகள் எப்படி ஏற்றம் பெற்றன என்பதனை எண்ணியாக வேண்டும். நாற்றமெடுத்தச் சமுதாயத்தை நறுமணப் பூங்காவாக மாற்றம் பெற வைக்க மாளாப் பணிகள் எதிரே இருக்கின்றன. இலட்சிய விளக்கேந்தி தி. மு. கழகம் வழிகாட்ட வேண்டிய நிலை உள்ளது.

நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னால் நானிலத்தில் மனிதன் வாழ்ந்த காலம் சராசரியாக பதினெட்டு ஆண்டுகளாகும். அப்படிக் கிடைத்த பதினெட்டு ஆண்டுக் கால ஆயுளை அன்றைய மனிதன் எப்படிப் பயன்படுத்தினான் என்று அறிவாளர்கள் கணக்கெடுத்துள்ளனர்.

ஏழரை ஆண்டுக் காலம் அன்றைக்கு தூக்கத்திற்காக மனிதன் செலவிட்டிருக்கின்றான். நாலரை ஆண்டுக் காலம் இளமை விளையாட்டு, கல்வி, பொழுது போக்கு இவைகளுக்காக மனிதன் செலவிட்டுள்ளதாக கணக்கிடுகின்றனர்.

வேலையைச் செய்ய வாழுளில் ஆறாண்டுக் காலம்தான் அன்றைய மனிதன் செலவிட்டுள்ளான்.

கி. மு. 400 ல் இருந்து கி. பி. 1900 வரையில் மனிதனுடைய சராசரி ஆயுட்காலம் முப்பத்தைந்து ஆண்டுகளாகும். இதில் பதின் மூன்று வருடம் தூங்கி இருக்கிறான். பன்னிரண்டு ஆண்டுகள் கல்வி, கேளிக்கை இவைகளுக்காக செலவிட்டிருக்கிறான். ஏறத்தாழ பத்தாண்டு காலம் உழைப்பதற்காகப் பயன்படுத்தி இருக்கின்றான்.

1900-க்கு பிறகு மனிதனுடைய ஆயுட் காலம் எழுபதாக உயர்ந்துள்ளது. இதில் இருபத்து நான்கு ஆண்டுகள் தூங்குவதற்காக மனிதன் செலவிடுவதாகவும் 38·7 ஆண்டுகள் ஓய்வு, பொழுதுபோக்கு, உண்டி கொள்ளுதல், கல்வி போன்றவற்றிற்குச் செலவிடுவதாகவும் கணக்கெடுத்துள்ளனர்.

தற்கால மனிதன் உழைப்பதற்கு என்று செலவிடுகிற காலம் 7·3 ஆண்டுகளாகும் என்று அறிவாளர்கள் கணக்கிட்டுள்ளனர்!

உழைக்கின்ற நேரத்தைக் குறைப்பதிலே மேனாட்டார் ஈடுபட்டுள்ள காலம் இது. ஐந்து நாள் வார வேலையென்ற திட்டத்தை நான்கு நாள் வேலை எனக் குறைப்பதிலே மேனாட்டவர் வெற்றி பெற்றுள்ள வேளை இது, உழைக்க நினைப்போர்க்கு உழைக்கும் வாய்ப்பையே கூட ஒழுங்காக உருவாக்கித் தர முடியாத ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்வதற்காக வெட்கப்பட்டாக வேண்டும். உழைப்போர்க்கு உழைப்பின் கடுமையினின்று விடுதலை அளிப்பதை இலட்சியமாக மேனாடுகள் கொண்டுள்ள இன்றைய நிலையில் கடுமையாக உழைக்க நினைப்போர்க்கு கால் வயிற்றுக் கஞ்சி ஊற்றக் கூடிய அளவு வேலை வாய்ப்பு வழங்கப்படாத ஒரு நாட்டில் ஆள்வோர் கேளிக்கைகளில் ஈடுபடும் கோமாளிகளாக இருப்பதற்கு அந்நாட்டு மக்கள் ஏமாளிகளாக இருப்பதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது!

அனிச்சம் பூவிலும் மென்மையான அடிகளைப் பெற்ற பைந்தமிழ்க் குலத்துப் பாவையர் காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் முள்ளிலும் கட்டாந்தரையிலும் கடும் உழைப்பை நல்கக் காண்கின்றோம்.

மண்மகள் அறியாத சீரடி பெற்ற மாதர்கள் நாற்று நட சேற்று வயலில் இறங்கி காலை முதல் மாலை வரை கொட்டும் வியர்வையில் குளிப்பதைக் காண்கின்றோம்.

பசிப்பிணி மருத்துவர்களாய் பாருக்குத் தோன்றும் உழவர்கள் ஓயா உழைப்பை நல்குவதோடு இக் கொடுங்கோல் ஆட்சிக்கு எட்டு இன்னுயிர்களை ஈந்துள்ள நிலையையும் பார்க்கின்றோம்.

சிற்றுளியே துணையென்று மலை பிளந்து கல் வெட்டி பிற நாடுகளுக்கு பழந்தமிழ் நாட்டுப் பாறைகளை ஏற்றுமதி செய்ய இடையுறாது பாடுபடும் கல் தச்சர்களை காண்கின்றோம்.

அன்னவரின் வயிற்றில் அடிக்க அரசுடைமைச் சட்டம் இயற்றி அரசும் செய்யாமல் யாரும் செய்யாமல் கறுப்புக் கல் தொழிலை நசித்து அதனால் வரும் அந்நியச் செலாவணியை கெடுத்து கல்தச்சர்களின் கண்ணீரைப் பெருக்கும் காட்டாட்சியை நினைக்கின்றோம்.

மனிதர்கள் மட்டுமா...... இந்த மண்ணில் மாடுகள்கூட கடுமையாக உழைக்கின்றன. நோஞ்சான் மாடுகள் சுமக்க முடியாத பாரத்தைச் சுமப்பதும் — இழுக்க முடியாத சுமையை இழுப்பதும் இங்கே அங்கிங்கெனாதபடி காணக் கூடியதுதான்.

இப்படி உழைப்பவரின் வேலைச்சுமையைக் குறைக்கும் வழியென்ன என்று இந்த நாட்டில் எண்ணிப் பார்ப்போர் இல்லாதது மற்றொரு குற்றமே! சண்டைக் காட்சிகளில் 'டூப்' நடிகர்கள் உயிரைப் பணயமாக வைத்துச் சண்டைபோட்டு கதாநாயகர்களின் வேலைச் சுமையை

[10ம் பக்கம் பார்க்க]

மதுவை ஒழிக்க...

மதுபானத்துக்கெதிரான போரில் சட்டத்தின் பிடியைத் தவிர அறிவூட்டும் பிரச்சாரமும் தேவை. பத்திரிகைகளும், பிற பிரச்சார சாதனங்களும் இவ்வகையில் முக்கியமான பங்குவகிக்க வேண்டும்; இவை மக்களை இணங்கச் செய்து அறிவூட்டி, பொதுமக்கள் இல்லங்களில் இந்த மது 'அரக்கனின்' அநீதிகளையும் அபாயங்களையும் எடுத்தோத வேண்டும். மேலும், ஏழை மக்களின் பொருளாதார நிலைமைகளுக்கு மதுவினால் ஏற்படும் எண்ணற்ற தீங்குகளை எடுத்துச் சொல்ல வேண்டும்; சமூகச் சூழ்நிலை சாதகமாக அமைந்தாலொழிய வெறும் சட்டம் மட்டுமே நற்பலனை விளைவித்துவிடாது.

துவக்க காலத்தில் மதுச் சட்டங்கள் தோல்வியடைந்ததற்குக் காரணம் சமுதாயத்திலுள்ள சமூக விரோதக் கும்பல்களே! மதுச் சட்டங்களை உடைப்பதனால் அவைகள் பலனடைந்தன. எந்த நாகரீக சமூகமும் தோல்வியைக் கண்டு அஞ்சாது; மதுவிலக்கிற்கு உள்ள எதிர்ப்பு, கள்ளச்சாராய அபாயம் இவ்விரண்டையும் உறுதியான முடிவோடு எதிர்த்துச் சமாளிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

—['பத்திரிகைத் தகவல் அலுவலகம்' இந்திய அரசாங்கம்.]

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை. மதுரை 11

உரிமையாளர்
பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி
12. அழகர்கோவில் சாலை. 72. C. L. வுன்ஹால்ரோடு, மதுரை.

புருஷன்

தென்னரசு

— முன்னுரை —

இது ஒரு புருஷனைப்பற்றிய கதை! இதுவும் நடந்த கதைதான். வைகை அணை கட்டப்பட்ட காலத்தில் இது நடந்தது என்று என்னிடம் சொன்னார்கள். அதனால் அந்தக் காலத்தையே மையமாக வைத்து எழுதியிருக்கிறேன். பத்து வாரங்கள் வரும். முடிவில் உங்கள் கருத்துகளைத் தெரிவியுங்கள்.

- தென்னரசு

வைகை அணையின் அடிவாரம்

'சக்குபாய் டீ ஸ்டால்...!' என்ற போர்டு அந்தக் கடையில் தொங்கியது. எத்தனைக் கடைதான் அந்த வரிசையில் இருந்தாலும் சக்குபாய் டீ ஸ்டாலுக்குத்தான் கிராக்கி அதிகம். எப்போதுமே அங்கு ஒரு கூட்டம் மொய்த்தபடி இருக்கும்.

குருவம்மா! அவள்தான் அந்தக் கடைக்குச் சக்ரவர்த்தினி, அவள் அழகியோ இல்லையோ, அவள் கையால் தேநீர் குடிப்பதற்காகத்தான் அவ்வளவு கூட்டம் அங்கே எப்போதும் தேங்கி நிற்கிறது.

முன் கூடத்திலுள்ள திண்ணையில் கண்ணாடிக்கோப்பைகளும், பித்தளைக் குவளைகளும் படைவீரர்களைப்போல் எப்போதும் அணிவகுத்திருக்கும் ஈரம் படிந்த தரையில் ஒரு கோணித் துணியின் மீது நின்று குருவம்மா டீ அடிப்பாள். காலை ஐந்து மணிக்கு டீ அடிக்கத் தொடங்குபவள் எப்போதுதான் நிறுத்துகிறாள் என்று திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. சில நாட்களுக்கு இரவு பத்துமணிவரை கூட அவள் கடை திறந்திருக்கும் அவளுக்கென்ன பத்து கைகளா? அவள் பார்க்கும் வேலைகளைக் கொஞ்சம் கவனித்துவிட்டால் இந்தச் சந்தேகம் வரத்தான் செய்யும். டீ அடிக்கிறாள்; பலகாரம் கொடுக்கிறாள், அதற்குக் காசு வாங்கிப் போடுகிறாள்; அடுப்பு விறகைத் தூண்டுகிறாள்; கையோடு கையாக வெற்றிலையும் போட்டுக்கொண்டு சுண்ணாம்பு விரலைத் துடைத்துக்கொள்கிறாள்; அடேயப்பா; டீக்கடை பாணியில் கூறினால் இந்த வேலைகள் எல்லாம் குருவம்மாவுக்கு 'ராப்தா' ஆகிவிட்டன.

பழக்கமாகி விட்டால் எந்தக் காரியத்திலும் நடுக்கம் ஏற்படுவதில்லைதான்! முதன் முதல் சைக்கிள் விடும்போது கைகள் ஆடுகின்றன, பழக்கிதருபவன் தொடையைக் கிள்ளி நேராகப் பார் என்கிறான் படிப்படியாக கை நடுக்கம் நின்று விடுகிறது. பின்னால் அவனே சர்க்கஸ் கொட்டகையில் மெல்லிய கம்பியில் சைக்கிள் விடும் 'சாம்பியன் ஆகி விடுவதில்லையா? அதுபோலத்தான் குருவம்மாவும்; டீ அடிப்பதில் தீ அடுப்பைக் கண்காணிப்பதில் தின்பண்டங்களைத் துரிதமாக வழங்குவதில் அவள் தன்னேரில்லாமல் விளங்கினாள் குருவம்மாவின் கைகள் எத்தனை வேலைகளைத்தான் செய்யட்டும்... அவள் கண்கள் கூட நிம்மதியாக இருக்கக் கூடாதா?

இருள் கவிந்து நூலாடை படிந்த அந்தக் குக்கு வீட்டையே ஏன் துளாவிக்கொண்டிருக்கின்றன?

உள்ளேதான் யாருமில்லையே! மாதச் சாப்பாட்டுக்காரர்களுக்கு பெரிய அடுப்பில் அரிசி வெந்து கொண்டிருந்தது, நறுக்கி வைக்கப்பட்டிருந்த காய்கறிகள் ஓலைத் தடுக்கில் குவிந்து கிடந்தன; பிறகு ஏன் உள்ளேயே பார்க்கிறாள்?

"எங்கே போனா இவ?"... டீ அடித்துக்கொண்டே குருவம்மா பேசினாள். தனக்குள்ளே தான் பேசிக்கொண்டாள்.

"இன்னிக்கி சனிக்கிழமை; சம்பளநாளு; எல்லாம் தெரிஞ்சும் இவ எங்கே போனா?"... குருவம்மா முனகிக்கொண்டே குருவி ரத்தம்போல் சிவந்திருந்த தன் வாயில் சுண்ணாம்பு படிந்திருந்த விரலை வழித்தாள் பெண்மை அறிந்தவர்களும்—தாய்மையை உணர்ந்தவர்களும் அப்படிப் பட்ட காட்சிகளைக் கண்டு மயங்கிச் சுருண்டுவிட்டதால்தான் எவ்வளவு நேரமானாலும் குருவம்மாவின் கையாலே போட்ட தேநீரைக் குடிப்பதற்குச் சக்குபாய் டீ ஸ்டாலில் காத்துக் கிடந்தார்களோ!

'சக்கு...!' குருவம்மா கூவி அழைத்தாள் இப்படி.

செப்புக் குடத்தில் தண்ணீர் தளும்ப தேகமெல்லாம் இளமை தளும்ப பல்லுப் போடாத காங்கேயத்துக் கன்றைப் போல் ஒரு பெண் இடுப்பில் குடத்துடன் வந்துகொண்டிருந்தாள்!

குருவம்மா அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏண்டி இவ்வளவு நேரம்?' என்று குருவம்மா கேட்டு நிறுத்துவதற்குள் சக்கு அருகில் வந்துவிட்டாள். சக்குவின் கண்கள் ஏன் மின்னுகின்றன?

சக்குவை அருகில் பார்த்ததும் குருவம்மா படபடத்துப் போனாள்.

நாடகத்தில் வரும் பாதர் வெள்ளை வாளை உருவுவதுபோல் அனுயாசமாகக் கையை உயர்த்தி டீக் கோப்பையை ஆற்றும் குருவம்மா திடீரென்று தீச்சுட்டவளைப்போல் துணுக்குற்று டீக் கோப்பைகளை கைதவற விட்டு விட்டாள்.

"சக்கு, ஏண்டி இப்படி கண்ணைக் கசக்குறே? கணிக்கலீரயிலே சண்டைப்போட்டுக்கிட்டியா? என்னடி நடந்திச்சு? எவனாவது காலிப்பய கலாட்டா செஞ்சானா? சொல்லுடி!

குருவம்மா வார்த்தைகளை வறுத்துக் கொட்டினாள்.

அதற்குள்ளாக சக்கு உள்ளே போய்விட்டாள். பின்னாலேயே குருவம்மாவும் போனாள்.

"ஏண்டி, வாசல்லே நின்னு கத்துக்கிட்டே இருக்கேனே, பதில் பேசினா என்ன- முத்தா சிந்திப்போகும்!' குருவம்மா எரிச்சலோடு கேட்டாள்.

"எல்லாம் ஒன்னாலேதான்'— சக்குவின் பதில் துப்பாக்கியிலிருந்து தோட்டா வெடித்தட் போலிருந்தது.

"என்னாலேயா? என்னடி சூச்சம் வச்சுப் பேசறே? பெத்ததாயிட்டே பேசுற பேச்சா இது? ஒடச்சுப் பேசடி—இப்பவே ஒனக்கு இவ்வளவு இறுக்கமா?' குருவம்மாவின் மனம் கொப்பளித்தது.

சக்கு பதில் பேசவில்லை. குருவம்மாவுக்கு அவளது மௌனம் வெடிப்பதற்காக ஊதும் பலூனைப்போல் பட்டது

"என்னடி அழுங்குனித்தனமா நிற்கிறே! நானென்ன செஞ்சேனும்! சொல்லிப்புடு" குருவம்மா விடுவாளா? குடைய ஆரம்பித்தாள்.

"ஒண்ணும் செய்யாமத்தான் காலனி பூராப் பேசுறாங்களாக்கும்! அணைக் கட்டுலே வேலைப்பார்க்கும் ஆயிரம் பேருந்தான் பேசுறாங்க!

கேட்டுப்பாரு! "சக்கு வாயைத் திறந்தாள். ஆனால் வார்த்தைகள் தேர் நகர்வதைப்போல் திணறின.

"சக்கு!" பல்லைக் கடித்தாள் குருவம்மா. எங்கிருந்துதான் அந்தச் சிவப்புவர்ணம் மின்னல் வேகத்தில் வந்ததோ தெரியவில்லை....

குருவம்மாவின் கண்கள் செம்பருத்திப் பூக்களைப்போல் சிவந்துவிட்டன

இப்போது அவள் பார்வைக்கு ஒரு தேவதைபோல் இருந்தாள். வாயில் காவிச் சிவப்பு, விழிகளில் கோபச் சிவப்பு, நெற்றியில் குங்குமச் சிவப்பு.

பெண்ணொளி எல்லா ஒளிகளிலும் சிறந்த ஒளிதான்! பெண்ணின் முகத்தில் துலியும் அந்த ஒளியை கோபமோ கவலைக்குறியோ எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது.

நீர் எழுத்துக்களைப் போல் அந்த ஒளி தனித்தே நிற்கும். குருவம்மா அனலைப் பொழிந்தாலும் அவள் முகத்தில் உறைந்திருந்த ஜீவகளை கொஞ்சங்கூட மங்காமல்தான் இருந்தது.

குருவம்மா, முந்தி கட்டின புருஷனுக்குத் துரோகம் பண்ணினா இப்ப பெத்த அப்பனுக்கே துரோகம் பண்றான்னு காலனி பூரா பேசுறாங்களே' என்று ராகம் கூட்டி அழ ஆரம்பித்தாள் சக்கு.

"மூடுடி வாயை! நீ ஒரு விவஸ்தை கெட்டவ; யாரோ சொன்னாங்களாம், இது அதைக் கேட்டுக்கிட்டு வந்து ஆவர்த்தனம் வாசிக்கிறா; பெத்த தாயைப்பத்தி ஊரிலே என்ன சொன்னாலும் நம்பறதாக்கும்!'

குருவம்மா இந்த இடத்தில் அல்லிராணியாகி விட்டாள்.

"சொல்றவுங்க சும்மாவா சொல்றாங்க? வெளக்கமாகத்தான் சொல்றாங்க? எங்கேயோ கிடந்த போக்கிரிப் பொன்னையாவைக் கூட்டியாந்து கல்லாப் பெட்டியிலே உட்காரவச்சுகிட்டு குருவம்மா கூத்தடிக்கிறான்னு சொல்றாங்க!' சக்கு விடவில்லை.

"ஹோ. எவடி பார்த்தவ? பசியாமெ சாப்பிட்டா ஏது சோறுன்னு கேப்பாளுக, சாப்பிடாமெ இருந்தா சோத்துக்கு விதியில்லேன்னு தண்டோராப் போடுவாளுக; குருவம்மா கூலி வேலைக்கிப் போகாமெ குந்திக்கிட்டு சாப்பிடுறது அவளுங்களுக்கு மனக்காப்பு; அதான் ஆரம்பிச்சுட்டாளுங்க... குருவம்மா கட்டுச் சேவலைப்போல் மூர்க்கமாகப் பேசினாள்.

"அவளுங்களுக்குத்தான் காப்பு; சரி எனக்காச்சும் உண்மை தெரிய வேண்டாமா?' நெருப்புத் துண்டுகளைப்போல் சொற்களைத் தூக்கிப்போட்டாள் சக்கு

"சக்கு! ஒனக்கு திமிரு எடுத்துப் போச்சா? சின்னஞ் சிறுசு பேசற பேச்சா இது! அதையும் சொல்லிவக்கிறேன் கேட்டுக்க! எல்லாம் ஒன்னப் புடுச்ச சனியன் தொலையிறதுக்குத்தான் அவரைப்புடிச்சு கல்லாவிலெ வச்சேன் போதுமா?' நறுக்குத் தெறித்தாற்போல் சொன்னாள் குருவம்மா.

"என்ன புரியச் சொன்னால்ல; என்னைப்புடிச்ச சனியனுக்கும் ஒன்னைத் தொத்திக்கிட்டிருக்கும் கரடிக்கும் என்ன ஒறவு?" சக்கு துருவினாள்.

"ஏண்டி நீ எனக்கு சக்களித்தியாட்டம் பேசறியே என்ன! மூளை பெரண்டு போச்சா? இல்லே எவவாவது ஒம் மனசிலே வெனையை வச்சுப்புட்டாளா?;'

"அம்மா! நீ பேசுறது ஒனக்கே நல்லாயிருந்தா சரி; ஊரிலே இப்படியெல்லாம் சொல்லுறாங்களேன்னு கேட்டா நீ பாட்டுக்கு தாண்டிக் குதிக்கிறியே?"

"ஆமாண்டி, இன்னிக்கு இதைக் கேட்டே, நாளைக்கி இன்னொன்னைக் கேப்பே, இதுக்கு முடிவு வேண்டாமா?"......அடித் தொண்டையில் பேசினாள் குருவம்மா.

"அவன் வர்றான், இவன் சிரிக்கிறான், நீ கல்லாப்பெட்டிகிட்டேயே வரப்படாது. செந்தூர் பொல்லாதவன். அவன் எதையும் செய்வான், பத்துப் பேருக்குத் தலைவன்கிற கர்வம்......எல்லாம் சொன்னேன! இப்ப உம்மேலேயே பழிவந்திடிச்சு! நான் அப்பவே நெனைச்சேன்; பொன்னையா ஏன் இங்கே வரணும்; எதுக்காக அவருக்கும் இங்கே ஜாகை, சாப்பாடெல்லாம்!—எனக்கு முதல்லே புரியலே, இப்பத்தான் தெரியுது, என்னைக் கெட்டுப் போகப்படாதுன்னு சொன்னே," நியாயந்தாள்.

'நீ மட்டும் கெட்டுப்போகலாமா?' சக்குவின் குரலில் தழுதழுப்பும் துயரமும் கலந்திருந்தன.

"சக்கு, இந்தாப் பாருடி! நா வாழ்ந்து குட்டிச்சுவராய் போயிட்டேன். இடிஞ்சுபோன வீட்டுலே எருக்கு மொளைச்சா ஊமத்தை மிளைச்சா என்ன? என்ன? பேசறவங்களை என் கிட்ட வந்து பேசச் சொல்லு. எவளாவது பூதியா எதையாவது பேசினா அவ நாக்கிலே சுண்ணாம்புக் குறிபோட்டு நறுக்கிப்புடுவேன்னு சொல்லி வையி...இனிமே நீ கேணிக்கரைக்கும் போக வேண்டாம். அந்த வேலையையும் நானே பாத்துக்கிறேன்.'

குருவம்மா பொரிந்துதள்ளினாள் அணைக்கட்டு சங்கு ஒலித்தது. கல்லெறிந்த தேன் கூட்டைப் போல் கூலிகள் சிதறிப் பிரிந்து குடியிருப்புகளுக்கு விரைந்தார்கள்.

தேயிலைத் தூள் வாங்க ஆண்டிபட்டிக்குப் போயிருந்த பொன்னையா அப்போதுதான் சைக்கிளில் வந்து இறங்கினான்.

"குருவம்மாவின் முகம் கொடு கொடுவென்று இருக்கிறதே, மலைச் சரிவில் இருக்கும் ஒற்றையடிப்பாதையைப் போல் சக்குவின் கன்னத்தில் கண்ணீர்க் கறைகள் நெளிந்து தெரிவது ஏன்?' பொன்னையாவுக்கு மனம் துருதுருத்தது. நீண்ட பெருமூச்சை வெளிவிட்டான்.

ஃ ஃ ஃ

வைகை அணைக் கட்டு வேலைக்கான ஆயத்தம் தொடங்கி விட்டது. மதுரைச் சிறையிலிருந்த தண்டனைக் கைதிகள் உள்பட இரண்டாயிரம் பேர் அதற்கென வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

மதுரை நகரில் புகழோடும் செல்வாக்கோடும் இருந்து வந்த நாகுக் கொத்தனார், அணைக் கட்டு வேலைகளுக்காக திறமை மிக்க நூறு கொத்தனார்களைப் பொறுக்கி எடுத்து

(12ம் பக்கம் பார்க்க)

அரும்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவன் பதிலுக்குக் காத்திராமல்—உள்ளே ஓடிவிட்டாள். கோகுல் ஆச்சரியத்தால் மரம்போல் நின்றுவிட்டான்.

மேல்நாடுகளிலே இதுபோன்ற முறையைக் கேள்விப்பட்டிருக்கிறான் அவன்; தினசரிப் பத்திரிகையையும் — காசுக் கிண்ணமும் சாலையோரத்திலே வைக்கப்பட்டிருக்குமாம்; தேவையானவர்கள் கிண்ணத்திலே காசைப் போட்டுவிட்டுப் பத்திரிக்கையை எடுத்துப் போவார்களாம்!

இங்கே நம் நாட்டில் பூட்டப்பட்டுப் புதைக்கப்பட்ட சாமி உண்டியல்களையே பெயர்க்காமல் இருந்தால் போதாதா?

பட்டணவாசிகளும் கற்றுக் கொள்ளாத நாகரிகத்தை, இந்தப் பட்டிக்காட்டு மங்கை எப்படித்தான் ஆசிரியரின்றிக் கற்றுக் கொண்டாளோ தெரியவில்லை என்று சிந்தித்தபடி நின்றான் கோகுல்! கையிலிருந்த ஒரு ரூபாய் நாணயத்தைப் பெட்டியிலே போட்டுவிட்டு, ஓர் ஒடிந்து போன சிகரெட்டைத் தேடி எடுத்து—அதை அந்தச் சிறு விளக்கிலே பற்றவைத்தபடி இரயிலடி நோக்கித் திரும்பினான்!

அவன் அடிகூட எடுத்துவைத்திருக்கமாட்டான்; அதற்குள் அந்தக் குடிசைக்குள்ளிருந்து 'அய்யோ—அப்பா;—அப்பா என்று அலறிய சப்தம் கேட்டது; அவளாகத்தான் இருக்க வேண்டும் — அவள் குரல்தான் அது' — கோகுல் தன்னை மறந்தவனாய் உள்ளே ஓடினான்.

வயதான கிழவர் — படுக்கையிலே பிரக்ஞையற்றுக் கிடக்கிறார்; அவர் மார்பிலே தலையைச் சாய்த்துக் கொண்டு அந்தப் பெண் அலறுகிறாள்!

' ஓகோ — செத்துவிட்டார் போலும்' என நினைத்துக் கோகுல் அருகே போனான்.

அவளோ அய்யோ—அப்பா என அலறிக் கொண்டே இருந்தாள். கோகுல் கிழவரின் முகத்திலே கையை வைத்துப் பார்த்தான்; அவர் சாகவில்லை என்பதைப் புரிந்து கொண்டான்; உடனே அவளைப் பார்த்து,

பயப்படாதே அம்மா; உன் அப்பா சாகவில்லை—மயக்கம் தான்'' என்று ஆறுதல் கூறினான்

அவளுக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது; தந்தையைத் தொட்டுப் பார்த்தாள்—அவன் கூறியது உண்மைதான்.

" அய்யா—கொஞ்சநேரம் அப்பாவைப் பார்த்துக்கொள்ளுங்கள், நான் ஒரே ஓட்டமாக ஓடி வைத்தியரை அழைத்து வந்துவிடுகிறேன் என்று கெஞ்சினாள் அவள்.

'முடியாது' என்று கோகுல் சொல்லமுடியுமா? மிக மிக நெருக்கடியான சூழ்நிலை. இரயில் நிலையத்திலே. இரயில் வரப்போகிறது என அறிவிக்கும் மணி ஒலிப்பது அவன் காதிலே விழுந்தது. இருந்தாலும் அவளுடைய வேண்டுகோளை அவனால் மறுக்க முடியவில்லை' "சரி" என்று தலையசைத்தான்,

அவள் ஓடினாள்; சிறிது நேரத்துக்கெல்லாம் வைத்தியருடன் ஓடி வந்தாள். வைத்தியர் கிழவருக்கு ஏதேதோ சிகிச்சைகள் செய்து மயக்கத்தைத் தெளிய வைத்தார்

கிழவரும் மெதுவாகக் கண் விழித்து "கோமதி" என அழைத்தார்.

அவளும் அப்பா எனத் தாவினாள்.— கிழவரின் படுக்கைக்கு அருகில்! 'கோமதி'— கோகுலுவின் உதடுகள் அந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்துக்கொண்டன!

வைத்தியர் போய்விட்டார். கோமதி நன்றி ஒழுகும் கண்களால் கோகுலைப் பார்த்தாள்! கோகுல், அந்த ஏழைக் குடும்பத்தின் இளஞ்சிட்டை இதயபூர்வமாக வாழ்த்திவிட்டு, நான் வருகிறேனம்மா' என்றான்.

படுக்கையிலிருந்த தந்தை, யார் கோமதி அது' என்று ஈன சுரத்தில் கேட்டார்.

" யாரோ வழிப்போக்கர் அப்பா; ரொம்ப நல்லவர். நான் வைத்தியரை அழைத்து வரும் வரையில் அவர்தான் உங்களுக்குக் காவல் இருந்தார்'' என்று கூறிக்கொண்டே கோமதி, கோகுலுக்கு மீண்டும் பார்வையினால் நன்றி செலுத்தினாள்.

விசாரித்துவிட்ட பிறகு கிழவரிடம் பேசாமல் போகக்கூடாதே'' என்ற எண்ணத்தில், கோகுல் அவரிடம் 'என்ன பெரியவரே—எப்படியிருக்கிறது உடம்பு' என்று கேட்டான்.

" எப்படியிருக்கு ... இப்பவா கொஞ்ச நாழிபாண்ணுதான் இருக்கு' என்றார் அவர்,

" பயப்படாதீங்க — சரியாய்ப் போய்விடும்; ரயிலுக்கு நேரமாவுது — நான் வர்றேன்'' என்று கூறிவிட்டு —கோமதியையும் பார்த்தபடி— அவன் வெளியே வந்தான்.

" இரயிலே எப்படியும் பிடித்துவிட வேண்டும்'' என்று— இரயில் நிலயத்தை அங்கிருந்தபடியே நோக்கினான்; அப்போதுதான் இரயில் நிலயத்தைவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தது; இனி இரயிலைப் பிடிக்க முடியாது, என்ற ஏமாற்றத்தோடு திகைத்து நின்றான்.

கடையோரத்தில் அவள் நின்று கொண்டு ' எங்களால்தான் உங்களுக்கு இப்படியாகிவிட்டது' என்று அனுதாபம் தெரிவித்தாள்.

கோகுலுக்கு, இரயில் தவறியது கூட மறந்து விட்டது — அந்த அனுதாபச் சொற்கள், அவன் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தன.

" பரவாயில்லை; அதனால் என்ன வருகிறேன்'' என்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்த்தான்.

" ஏன் — இங்கு திண்ணையிலேயே படுங்களேன்; காலையில்தானே இரயில் ' என்றாள் அவள்

" காலை இரயிலில் சென்றாலும் பயனில்லை; மாயவரத்திலே 'மதராஸ் மெயிலைப் பிடிக்க வேண்டுமானால் நாளை இரவு இரயிலில்தான் போயாக வேண்டும்; காலையில்போனால் எங்காவது காத்திருக்க வேண்டியதுதான்'' என்றபடி கோகுல் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

உள்ளேயிருந்து இருமல் ஒலி கேட்கவே, கோமதி ஓடினாள்; கோகுலும் பின்னால் சென்று கவனித்தான்.

கிழவர் கோகுலைப் பார்த்து ' நீ போகல்லேயா தம்பி என்று பரிவோடு கேட்டார். அவருக்கு நம்மாலே இரயில் தவறிவிட்டதப்பா; இனிமேல் நாளை இரவில் தான்— பாவம் என்றாள் கோமதி!

" அப்படியா— அய்யோபாவம்'' என்று அவனை அருகே உட்காரச் சொன்னார்.

ஃ ஃ ஃ

கோகுலுவுக்குத் தூக்கம் வரவில்லை; கிழவர் இருமிக் கொண்டே அவனைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். கோமதியை நினைத்தால் நான் தனக்கு பயமாக இருக்கிறதென்றும் ஓநாய்களுக்கிடையே மான் குட்டியை வைத்துக் காப்பாற்றுவது போல அவளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறதென்றும் சொல்லி அழுதார்.

தாயை இழந்த கோமதியை இத்தனை நாள் பாதுகாப்பாக வளர்த்துவிட்டேன்; அவளை ஒரு நல்ல பையன் கையிலே பிடித்துக் கொடுக்காமல் போகிறேனே— அதுதான் எனக்குக் கவலை'' என்று கூறிக் கண்ணீர் வடித்தார்.

நெடுநேரத்துக்குப் பிறகு கோகுல் திண்ணையிலேயே படுத்துக்கொண்டான்; தூக்கமே வரவில்லை அவனுக்கு; ஏதேதோ எண்ணச் சுழற்சிகள்; குழந்தை குமார்— கோமதி இருவரும் அவன் கண் முன்னே மாறி மாறி வரவேண்டிய காரணம் என்ன?

விடியற்காலையில்தான் தூக்கம் அவன் கண்களைத் தழுவ ஆரம்பித்தது; ஆனால் திடீரென்று கேட்ட கோமதியின் அலறல் அவனைத் திடுக்கிட்டு எழச் செய்தது; கதவைத் தட்டினான்; கதவை திறந்து விட்டு அவள் அப்பா, அப்பா' எனக் கதறினாள். கோகுல் கிழவரிடம் ஓடிச் சென்று பார்த்தான்; உடல் ஜில்லிட்டுப் போயிற்று — கிழவர் போய்விட்டார்

எதிர்பாராத சுமை கோகுலுக்கு; நல்லவேளை—இரயில் மாலையில்தானே — கிழவரை அடக்கம் செய்ய வேண்டிய காரியங்களைக் கவனித்தான்; அவனது பேருதவியுடன் கோமதியின் தந்தை அடக்கம் செய்யப்பட்டார்; ஊர் மக்கள் சிலர் வந்து கோமதிக்கு நேராக ஒப்பாரி வைத்து விட்டுப் போய்விட்டனர்!

தந்தையின் பிரிவால் கோமதி தணற்புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள், அவளுக்கு இருந்த ஒரே துணை—அதுவும் போய்விட்டது!

இரவு வந்தது; திண்ணையிலேயே பொழுதெல்லாம் உட்கார்ந்திருந்த கோகுல், எழுந்து உள்ளே வந்தான்; கோமதி அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான் — 'கோமதி' என்றான் — குரல் கம்மிய நிலையில்!

அப்பொழுதுதான் அவளுக்குக் கோகுலைப்பற்றிய நினைவு வந்தது; 'அய்யோ யாரோ; ஒரு பரோபகாரி - இவ்வளவு உதவிகள் செய்திருக்கிறார்; அவருக்கு ஒருவேளைகூட சாப்பாடு போடவில்லை; சாப்பிடு என்றுகூட கேட்கவில்லையே'' என்று அவள் மனச்சாட்சி பேசிற்று; எழுந்து நின்றாள் கண்ணீர் வடித்தபடி'

'நான் வரட்டுமா கோமதி''— கோகுல் முடிக்கவில்லை ..... அதற்குள் அவன் கால்களிலே விழுந்துவிட்டாள் அவள் "இன்னும் இரண்டு நாளைக்கு இருங்கள்; எனக்குச் சிறு ஆறுதலாகவாவது இருக்கும் ' என்றாள்.

கோகுல் மௌனமாகிவிட்டான்; அசைவற்றுப் போனான்; திருக்குவளை நண்பன் இத்தினம் நூறு தடவை சொன்னான் — 'இரண்டு நாள் இருந்துவிட்டுப்போ' என்று; அதைக் கேட்கவில்லை —மறுத்து விட்டான்; இப்போது அசைவற்று நிற்கிறான்

அவன் யார் எங்கிருந்து வந்தான்—கொதிக்கும் நெருப்புக்குண்டத்தின் ஓரத்திலே தூக்கி எறியப்பட்டான் அவன்; அதே நெருப்பின் தணலுக்கு அருகில் கருகிக் கொண்டிருக்கும் மலராகக் கோமதி இருந்தாள்; சந்தர்ப்பம்—இப்படி ஒரு சூழ்நிலையைப் படைத்துக் கைகட்டி ஆரவாரம் செய்தது; அவன் கண் எதிரே குழந்தை குமார் வந்து போனான்!

" ஏன் பேசாமலிருக்கிறீர்கள்; நீங்கள் நேற்று இரவு முதல் செய்த உதவிகள் பெரிதல்ல; அனாதையாய்ப் போய்விட்ட எனக்கு........ எனக்கு .... எனக்கு...''

கோமதி விக்கி விக்கி அழுதாளே தவிர பேச்சை முடிக்கவில்லை' சாகப்போகும் நேரத்தில், தன் அருமை மகளைப்பற்றி அந்தக்கிழவர் கூறிய வார்த்தைகள் அவன் நெஞ்சைக் குடைந்து கொண்டேயிருந்தன!

" அழாதே கோமதி — நான் இரண்டு நாட்கள் இருக்கிறேன்'' என்று அவளைத் தூக்கி நிறுத்தினான்; வழிந்து கொண்டேயிருந்த கண்ணீரைத் துடைத்தான்; அப்போது அவன் கைகள் நடுங்கின .. ..கண் எதிரே குமார் வந்து நின்று, 'அப்பா' என்று கூப்பிடுவது போல் இருந்தது!

ஃ ஃ ஃ

சென்னையிலே கோகுல் வீட்டு மெத்தையிலே குமார் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கனவு .....குழந்தையின் கனவு எதுவாக இருக்கும்? எந்த அப்பாவியை ஏமாற்றி — யாரை மோசம் செய்து 'இலட்சாதிபதியாகலாம்' என்று கனவு காணப்போகிறதா? அல்லது பதவி தேடுவதற்காக, எப்படிக் கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிடலாம் — யார் யாரைக் 'காக்கா' பிடிக்கலாம் என்று கனவு காணப் போகிறதா? குழந்தையின் கனவுகள் முள்ளிலே இருக்கும் ரோஜாவைப் பறிப்பது போலிருக்குமே தவிர தேன் பூச்சிகளை அழித்துவிட்டு — தேனடையை எடுத்துக் கசக்கிப் பிழிவதைப்போல இருக்காது;

அதுவும், தாயை இழந்த ஒரு குழந்தையின் கனவு எப்படி இருக்கும்? மிகமிக மென்மையான கனவு — ரோஜாவைப் பறிப்பது போலக்கூட இல்லாமல் ரோஜாமலரே குழந்தையின் கன்னத்தில் வந்து விழுந்து விடுவது போன்ற கனவு; ஆம், குமாரின் தாயார் அவனைத் தூக்கி முத்தமிட்டு மார்போடு அணைத்துக் கொஞ்சுகிறாள்— ஆராரோ பாடுகிறாள் – அவனோ தூங்க மறுக்கிறான்; காலை நேரம்— தலைவாரி உடையலங்காரம் செய்து அவனை பள்ளிக்கூடம் அனுப்புகிறாள்; அவன் போகும்போது பின்னழகைப் பார்த்தபடி வாயிற்படியிலே நிற்கிறாள். பள்ளியிலிருந்து திரும்பி வருகிறான்; எதிர் கொண்டழைத்து உச்சி மோந்து முத்தமிட்டு விளையாட அழைத்துச் செல்கிறாள்...

குமார் விழித்துக்கொள்கிறான்: கனவு...... தாயாரைக் காணவில்லை; ரோஜா மறைந்து விட்டது; படுக்கைமுழுவதும் முள்ளாகக் குத்துகிறது; பிஞ்சு மனம் — அரும்பு உள்ளம்—' அம்மா, அம்மா' என அலறுகிறது!

சுவரில் தாயின் படம்; ஆம்-படமாகி விட்டாள் அவன் தாயார்; அந்தப் படத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொள்ளுகிறான். கண்ணீர் பசுந்தரையிலிருந்து ஊற்றெடுத்துக் கிளம்பிவரும் அருவி; படத்தை அணைத்தபடி படுக்கையில் சாய்கிறான். 'மறுபடியும் அம்மா கனவிலே வரமாட்டாளா' என்ற ஆசையோடு கண்ணை மூடிக் கொள்ளுகிறான் —தூங்கி விடுகிறான்

விடிந்து விடுகிறது; வேலைக்காரனும்—வேலைக்காரியும் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டார்கள்; பிள்ளை அம்மாவை நினைத்து நினைத்து ஏங்கி விடும் போலிருக்கிறதே என்று எண்ணி தூங்கும் அரும்பின் கையிலே இருந்த அம்மா படத்தை மெதுவாக எடுத்து ஒளித்து வைத்துவிட்டார்கள்.

குமார் எழுந்தான்: கையிலே இருந்த அம்மா எங்கே— விழித்தான்; யார் தூக்கிக் கொண்டு போயிருப்பார்கள்- ஒரு வேளை கனவு உலகத்திலே போட்டு விட்டு வந்து விட்டோமா! —இப்படி நினைந்தான்!

பரவாயில்லை — இன்றிரவு கனவுலோகத்துக்குப் போகும் போது எடுத்துக் கொள்ளலாம் —இப்படி ஆறுதல் அந்தக் குழந்தைக்கு!

ஃ ஃ ஃ

அம்மனூரில் இரண்டொரு நாட்கள் கழிந்து விட்டன கோகுலுக்கு; கோமதியும் தந்தையின் பிரிவை கோகுலின் உறவால் ஒருவாறு ஆற்றிக் கொண்டாள்.

எதையோ எண்ணி ஏங்கியவாறு கடையிலே அமர்ந்து வியாபாரத்தைக் கவனிக்கும் கோமதியின் முகத்திலே அவன் கற்பனை செய்ய முடியாத அழகையும்—அந்த அழகிலே மறைந்து கிடக்கும் அமைதியோடு குழைந்து நிற்கும் அன்பையும் அவன் ரசித்துக் கொண்டேயிருந்தான்!

கடைக்குத் தின்பண்டங்கள் வாங்க வருகின்ற குழந்தைகளிடம் அவள் காட்டுகின்ற அன்பை அவன் உன்னிப்பாகக் கவனித்தான்; வறண்ட தலையோடு வரும் குழந்தைகளுக்கு எண்ணெய் தடவி சீவி விடுவாள். நன்றாகப் படிக்க வேண்டுமென்று உபதேசம் செய்து அனுப்புவாள்! இத்தனையும் கோமதியின் பால் கோகுலுக்குப் புதிய எண்ணத்தை வளர்த்தது' அதோடு. கோமதி தனியாக இருந்தால், அந்த ஊரில் திரிகின்ற ரௌடிக் கும்பல் அவளைச் சும்மா விடாது' என்பதையும் புரிந்து கொண்டான்!

வாலிபன்—அதனால் காதல் பொங்குகிறது!

தகப்பன்—அதனால் குழந்தை குமார் எதிரே நிற்கிறான்! நல்ல மனிதன். அதனால் ஓர் அபலையைக் காப்பாற்ற வேண்டுமென்ற கடமை உணர்ச்சி எழுகிறது!

கடைசியில். காம உணர்ச்சியின் பெயரால் காதல் வென்று விடுகிறது. அவனுக்கு ஒரே நம்பிக்கை—குமாரின் தராசு சாய்ந்து விடாது' என்பதுதான்; காதலின் வெற்றிக்கு அந்த நம்பிக்கையும் ஒரு காரணமே; கடைக்கு வரும் குழந்தைகளிடம் கோமதி காட்டிய பாசம், குமாரைப் பற்றிய பயத் திரையை கோகுலுக்கு விலக்கி விட்டது'

கிழவர் செத்து விட்ட துக்கம் விசாரிக்க அயலூரிலிருந்து ஒரு பாட்டி வந்திருந்தாள்; கோமதிக்கு அவள் தூரத்து உறவு; அவள் கேட்டாள்— 'இந்தப் பிள்ளையாண்டான் யார் என்று கோகுலைக் காட்டி'

" தூரத்து உறவு பாட்டி – அண்ணன் முறை என்று சொல்லி விடலாமோ ' என எண்ணினாள் கோமதி; ஏனோ அப்படிச் சொல்ல அவள் மனம் இடம் தரவில்லை!

"பட்டணத்திலிருந்து வந்திருக்கிறார்— எங்க அத்தை மகன்'' என்று கோமதி பாட்டியிடம் சொல்லியதை, திண்ணையிலிருந்த கோகுல் கேட்டு, தனக்குத்தானே மகிழ்ந்து கொண்டான்.

பாட்டி ஊருக்குப் போய் விட்டாள்!

அத்தை மகன் — கோகுலுக்கு அந்த வார்த்தைகள் எத்தனையோ இன்பக் கதைகளைச் சொல்லத் தொடங்கின. கோமதியும்—கோகுலும் சேர்ந்து சென்னைக்குப் புறப்படும் வரையிலே அந்தக் கதைகள் நீண்டன. அவளுக்கு அத்தை மகனாகவே ஆகிவிட கோகுல் தீர்மானித்து விட்டான்! தனியாக வந்த கோகுல் கோமதியுடன் சென்னைக்குப் பயணத்தைத் தொடங்கினான் இருவரின் வாழ்க்கைப் பயணமும் ஆரம்பமாயிற்று!

ஃ ஃ ஃ

இருவரும் வண்டியிலிருந்து இறங்குவதை வேலைக்காரனும் வேலைக்காரியும் பார்த்து விட்டு ஒருவர் முகத்தை ஒருவர் வியந்து நோக்கிக் கொண்டனர்.

கோமதியை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான் கோகுல்; அவர்களுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

"குமார்?'' எங்கே என்று கேட்டபடி கோகுல் உள்ளே நுழைந்தான்

" இப்பத்தான் பள்ளிக்கூடம் போச்சு'' என்றாள் வேலைக்காரி.

சுவரிலே மாட்டப்பட்டிருக்கும் தன் மூத்த மனைவியின் படத்தை அண்ணாந்து பார்த்தான் கோகுல் அங்கே படமில்லை- தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு:

"படம் என்ன ஆயிற்று?' என்று வினவினான்.

வேலைக்காரன் சொன்னான்— படத்தைப் பார்த்துக் குழந்தை அழுவது அதிகமாயிடுச்சுங்க; அதனால் அதை மறைச்சு விட்டேங்க'' என்று:

கோகுலின் கண்களில் நீர் ததும்பிற்று!

"என்ன படம்'' என்று கேட்டாள் கோமதி.

'உங்க அக்கா படம்'' என்றான் அவன்! வேலைக்காரனிடம் கேட்டு, அந்தப் படத்தை வாங்கிப் பார்த்தாள் கோமதி; அவள் கண்களும் கலங்கின!

'பூவோடும் பொட்டோடும்—மஞ்சளோடும் — மாங்கல்யத்தோடும் போய்ட்டாங்க எங்க அம்மணி ' என்று அழுதாள் வேலைக்காரி;

'நீங்க வந்திருக்கீங்க தாயே; நீங்களும் மகாலட்சுமி மாதிரி இருக்கீங்க; எங்க சின்ன எசமானை.. ...அய்யாவோட செல்லக் குழந்தையை...... எங்க அம்மணியோட வயித்திலே வந்த வைரத்தை...... ஒரு குறையும் இல்லாம காப்பாத்துங்க அம்மா!' என்று கோகுல் கூற வேண்டியதை. வேலைக்காரனே கூறி முடித்தான். கோமதியிடம் விடை பெற்றுக் கொண்டு கோகுல், பத்திரிகை அலுவலகத்திற்குப் புறப்பட்டான்!

ஃ ஃ ஃ

அன்றைய தினம் ஆசிரியர் கோகுல் எழுதிய கட்டுரைகள் அத்தனையும சுவைமிகுந்தவை; தலையங்கம் புதுமுறுக்கோடு காணப்பட்டது; நண்பர்கள் காரணம் விசாரிக்கத் தொடங்கினர்; காரணத்தைக் கேட்டு அனைவருமே மகிழ்ந்தனர்.

ஆசிரியர் அறைக்குஏறிச்செல்ல வேண்டிய ஐம்பது மாடிப்படிகளையும் அன்றைய தினம் அவன் அனுபாசமாகக் கடந்தான்

வாழ்க்கையின் முதல் படியிலே வழுக்கி விழுந்து — விழுந்த இடத்திலே குமார் என்னும் கோமேதகக் கல்லை எடுத்தபிறகு—இத்தனை நாள் கழித்து இப்போதுதானே அடுத்த படியில் கால் வைக்கத் துணிந்திருக்கிறான்.

" முதல்தாரத்துக்கு குழந்தை இருக்கும்போது இரண்டாந்தாரமாக ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்வது சரியா?—தவறா?' என்ற கேள்வியைத் தன் நண்பர்களிடமெல்லாம் பொறுக்கிச்சேர்த்தான் அதில் அவனுக்குச் சாதகமான பதிலும் கிடைத்தது – பாதகமான பதிலும் கிடைத்தது!

ஃ ஃ ஃ

பள்ளிக்கூடத்திலே குழந்தை குமார் ஒரு மூலையிலே உட்கார்ந்துகொண்டு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான்,

எதைச் சிந்திக்கப் போகிறான்— அவன் தகப்பனைப்போல் உலகப் போரைப் பற்றி என்ன தலையங்கம் எழுதலாம் என்றா? அல்லது அவனது பள்ளி ஆசிரியரைப் போலச் சம்பள உயர்வுக் கிளர்ச்சி வெற்றி பெறுமா என்றா?

அவன் சிந்தனை முழுவதும் தாயாரைப் பற்றியது தான்!

விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் அவனைப் பார்த்து கேலி செய்யத் தொடங்கினர்— 'பாருடா கௌதம புத்தர் சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார் என்று அன்றைக்குப் படித்த பாடத்தை ஒப்புவித்தான் ஒரு குறும்புக்கார இளைஞன்.

கௌதம புத்தர் என்றாலே என்னவென்று தெரியாத பிஞ்சு — குமார்! அவன் படிக்கும் வகுப்பே வேறு!

பள்ளி முடிந்து — பசலைகள் அனைவரும் கூட்டம் கூட்ட

[8-ம பக்கம் பார்க்க]



அரும்பு...

((7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கும்மாளம் அடித்தபடி வீடு நோக்கி ஓடுகிறார்கள்; குமார் மட்டும் தன்னந்தனியாக வந்து கொண்டிருக்கிறன்.

விட்டுக்குத் திரும்பும் குழந்தைகளை அவர்களது தாய்மார்கள் வாயிலில் நின்று எதிர்கொண்டழைத்துத் தூக்கி முத்தமிடுகிறார்கள்; குமார் அவைகளைக் கவனிக்கிறன்; அந்த அரும்பின் நடையிலே ஒரு தளர்ச்சி — கண்களிலே கலக்கம்; இருதயத்திலே புயல்; தாங்குமா அந்த இளந் தங்கம் அந்தக் கொடு நெருப்பை— உருகி ஓடிற்று.

நமக்கும் ஓர் அம்மா இருந்தால் நம்மையும் இப்படித்தானே தூக்கி முத்தமிட்டு எதிர்கொண்டு அழைப்பார்கள் —இப்படித்தான் விம்மியது போலும், அந்தப் பிறை நிலவு!

எல்லாப் பிள்ளைகளும் அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள்; குமார் மட்டும வீடு நோக்கி வந்துகொண்டிருக்கிறன்; அதோ அவன் வீடு— வீட்டு வாயிலிலே யார் அந்தப் புது உருவம்—ஒருவேளை, அம்மாவா? வாயிற்படியில் அடியெடுத்துவைத்த அவனை வாரி எடுத்துத் தூக்கினள் கோமதி!

எதிர்பாராத ஓர் உணர்ச்சி குமாரின் உள்ளத்தைஉலுக்கி விட்டது போலும் — அவன் கண்கள் தாரை தாரையாக நீரைப் பொழிந்தன.

கோமதிக்கு நடுக்கம் பிறந்தது; தன்னைக் குமார் ஏற்றுக் கொள்ளவில்லையெனக் கருதினள்; அவள் உள்ளம் போர்க்களமாயிற்று — அரும்புப் பொதி அவிழாச்செடி இந்தக் குடும்பம்; அதன் வேரிலே ஊற்றப்படும் வெந்நீராக ஆகிவிட்டோமோ என பயந்தாள்!

சிறிது நேரத்திற்கெல்லாம் குமாரின் உடல் கொதிக்க ஆரம்பித்தது; கோமதி அழுதே விட்டாள்!

அலுவலகத்திலிருந்து குழந்தைக்குத் தின்பண்டங்கள் வாங்கி வந்த கோகுல், இந்தக் காட்சியைப் பார்த்துக் கலங்கினன்; 'அம்மாபாருடா கண்ணு' என்று கோமதியை காட்டினன்!

"எனக்குப் பொய் அம்மா வேணும் —நிஜம் அம்மா தான் வேணும்' என்று புலம்பினன் குமார்.

அந்த வார்தைகள் வெடி மருந்துச் சாலையில் கிளம்பும் தீப்பொறிகள் போல இருந்தன கோமதிக்கு!

குமாரின் காய்ச்சல் அதிகமாயிற்று; கோமதிக்குச் குழந்தையுடன் இணைபிரியாதிருக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது; அந்தச் சந்தர்ப்பம குழந்தைக்கும — அவளுக்கும் தனியாத பாசத்தைத் தோற்றுவிக்க உதவிற்று

ஆபத்து நேரங்களில்தான் நட்பு—காதல்—பாசம் இவைகளின் 'மீட்டரே அதிகமாகிறது—ஏன்—சில இடங்களில் ஆரமபமாகிறதுஎன்று கூடச் சொல்லலாம்; அதற்கு உதாரணம்தானே கோகுல் - கோமதி இருவரின் காதல்!

குமார், சிறிது சிறிதாக உடல் நலம் பெற்று எழும்போது, கோமதியை 'அம்மா' என்று வாயார அழைக்கும் புதிய குமாராக இருந்தான்.

கோமதிக்குக் கொண்டாட்டம் தாங்கவில்லை; கோகுல் கூடச் சலித்துக்கொள்ளும் அளவுக்கு அவள் குழந்தையைப் பராமரிக்கத் தொடங்கி விட்டாள்.

குமாருக்கு ஓர் அம்மாகிடைத்து விட்டாள்; பள்ளிக்கூடம் அனுப்ப — பள்ளிக்கூடத்திலிருந்து எதிர் கொண்டழைக்க ஓர் அருமையான அம்மா கிடைத்துவிட்டாள்!

இப்போது குமார், பள்ளிக்கூடத்தில் பாலபுத்தரைப் போல் உட்கார்ந்திருப்பதில்லை; வீர நெப்போலியனைப் போல் விஷமங்கள் செய்கிறன்!

வீடு திரும்பும்போது சிறுவர்களை அவர்கள் தாயார் உபசரித்து வரவேற்பதை இப்போதெல்லாம் குமார்— வெகு அலட்சியத்துடன் பார்த்துவிட்டுக் கம்பீரமாக நடக்கிறன்

ஃ ஃ ஃ

முன்பெல்லாம் குமார் ஓர் இலை! ஒரு மொட்டு இப்போது இரு இலை ஒரு மொட்டாக ஆகிவிட்டான்!

இரவு வெகுநேரம்வரையில் கோமதியின் வருகைக்காக கோகுல் விழித்திருக்கவேண்டியிருந்தது படுக்கையறையில்; காரணம், குமாரையும் கதை சொல்லி — பாட்டுப் பாடி தூங்க வைத்துவிட்டுத்தான் அவள் கோகுலிடம் வருவாள்; கோகுலுக்கு அதில் கொஞ்சம் வருத்தம் கூட; ஆனாலும் வீட்டிலே குமாருடன் விளையாடுவதற்கு ஒரு பாப்பா வரப் போவதாக வேலைக்காரனும்.. வேலைக்காரியும் குமாரிடம் அடிக்கடி தெரிவித்து வந்தார்கள்

"அந்தப் பாப்பா எங்கிருந்து வரும்... அது எப்படியிருக்கும்' என்கின்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான் குமார்.

ஒருநாள் கோகுல், அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே தங்கி விட்டான்; கோமதிக்கு அன்று பிரசவ வேதனை அதிகமாகி விட்டது.

குமாருக்கு ஒன்றும் புரியவில்லை — 'அம்மா ஏன் இப்படிக் கத்துகிறது' என்று அப்பாவைக் கேட்டான்... வேலைக்காரர்களைக் கேட்டான்

பெரிய சாக்ரடீசாக இருந்தால் தானென்ன— குழந்தையின் தர்க்கவாதக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட முடியுமா என்ன?

குமாருக்கு செயல் மூலம் பதில் சொல்லி கோமதி ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி விட்டாள்! குமார் எதிர்பார்த்த பாப்பா வந்துவிட்டது!

"அம்மா, அப்பா... பாப்பாவை என்னோடு பள்ளிக்கூடம் அழைச்சிட்டு போகட்டுமா?'

குமாரை முத்தமிட்டுக் கொண்டே கோமதி 'இப்போது வேண்டாண்டா ராஜா" என்று தழுவிக் கொண்டாள்.

அந்த அன்பு ஸ்பரிசத்திலே, அந்த அரும்பு மெய்மறந்து போயிற்று!

ஒருவருக்கொருவர் சமமாகப் பலமும் – வளமும் இருக்கும் போதேபொறாமை உணர்ச்சி தலைகாட்டுகின்ற இந்த உலகில் குமாரைவிடத் தன் குழந்தை பலகீனமாகவும் வளமற்றும் இருப்பதைக் காணும் கோமதிக்கு அது போன்ற பொறாமைக் கனல் அவளையும் அறியாமல் மூண்டதில் ஆச்சரியமில்லைதான்!

ஃ ஃ ஃ

பாப்பா பிறந்ததுமுதல்அதற்கு நீங்காத நோய்தான்; அதைக் கவனிப்பதிலேயே அவளுக்கு நேரம் முழுவதும் செலவாயிற்று; தன் குழந்தையின் நோய் நீங்க, நல்ல டாக்டர் ஒருவரிடம் கோகுல் காட்டவில்லை என்ற வருத்தம் வேறு அவளுக்கு; 'என குழந்தைன்னு உங்களுக்குத தள்ளுபடி' என்று ஒருநாள் அவள் கோபமாகப் பேசிவிட்டாள் கணவனிடம்!

"என் குழந்தை" — இந்த வேறுபாடான வார்த்தை, கோகுல் உள்ளத்தில் சம்மட்டி அடிபோல் விழுந்தது!

"பெண்கள் தங்களுக்கொரு குழந்தை பிறக்கும வரையில்தான் மற்ற குழந்தைகளிடம் அன்பாக இருக்கிறார்கள்; அப்படி அன்பாக இருந்தால்தான் தங்களுக்குக் குழந்தை பிறக்கும் என்ற பழைய நம்பிக்கைதான் அதற்குக்கூட காரணம் போலும், எல்லர்க் குழந்தைகளிடமும் எப்போதும் அன்பாக இருக்க வேண்டும்' என்ற புதிய எண்ணம் பெண்கள் உள்ளத்திலே வளராதா? இப்படிப் பெண்கள் சமுதாயத்தைப்பற்றியே ஒட்டு மொத்தமாக ஒரு கணக்குப் போட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான் கோகுல்!

"என் குழந்தை—உன்குழந்தை என பிரித்துப் பேசுகின்ற அளவுக்கு வந்து விடுவாள் கோமதி 'என அவன் நினைக்கத்தான் இல்லை

"அம்மனூர் கோமதி எங்கேயோ போய்விட்டாளே... அம்மாவின் இடத்தில் வைத்துக் குமார் மகிழ்ந்த அந்தக் கோமதி ஏன் மறைந்து விட்டாள்? '— கோகுல் குமுறும் கடலானான்!

பாப்பா வந்து விட்டதால் குமாரிடம் கோமதி காட்டுகின்ற அன்பு குறைந்திருக்கத் தேவையில்லைதான்; ஆனாலும் பாப்பாவின் உடல்நிலை கோமதியை அந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது! ஒரு நாள், படுத்திருந்த பாப்பாவைக் குமார் மிகவும் சிரமப்பட்டுதூக்கிக்கொண்டு தெருப்பக்கம் போனன்; அதைப் பார்த்த கோமதிக்குப் கோபம் வந்துவிட்டது; 'டேய்மூதேவி; ஏண்டா குழந்தையைத் தூக்கிட்டுப் போய் கொல்லப் பாறே' என்று அலறியபடி குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு உள்ளே வந்ததைப் பலகணி வழியே கோகுல் பார்த்தான்!

ஏதோ தப்பு செய்துவிட்டோம் போலிருக்கிறது; அதுதான் அம்மா திட்டுகிறார்கள் என்று குமார் நினைத்துக் கொண்டு, இளம் வாய்ச் சிரிப்பைக் காட்ட — இரு விழியும் நீரைக் கொட்ட அப்படியே நின்று விட்டான்! 'மூதேவி' என்பதற்குப் பொருள் அந்த மொட்டுக்கு என்ன தெரியும்? கோமதிக்குத் தன் குழந்தையைப்பற்றிய ஏக்கம் அதிகமாகிவிட்டது; நாளுக்குநாள் அது உடல் மெலிவதை அவளால் சகிக்க முடியவில்லை!

ஒருநாள் குழந்தைக்குக் கடுமையான காய்ச்சல்கண்டது; மனம் கொதித்த கோமதி, 'நல்ல டாக்டர் யாரையாவது அழைத்து வரக் கூடாதா? என்று கணவனைக் கடிந்து கொண்டாள்; அப்போது எதிரே ஒரு டாக்டர் வந்து நின்றார்!

"யார்சார் உங்களைக் கூப்பிட்டு வந்தது?' என்று வியப்போடு கேட்டான் கோகுல் "இதோ இவன்தான்" —என்று குமாரைக் காட்டினர் டாக்டர்! உடனே கோகுல், மகனை அள்ளி எடுத்து அணைத்து முத்தமாரி பொழிந்தான்!

ஆனல் குமார் எதிர்பார்த்தபடி அவன் அம்மாவிடமிருந்து ஒரு முத்தத்துளிகூட கிடைக்கவில்லை; காரணம என்ன— குமார் யோசித்தான்; இளம் நெஞ்சம் இதுபோன்ற பெரிய யோசனையில் ஈடுபடலாமா? எனக்கு நிஜ அம்மா இல்லே—இது போலி அம்மா —பொம்மை அம்மா — இப்படி ஒரு முடிவுதான் அவன் மனதில் உதயமாகி இருக்க வேண்டும்; புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் புறப்பட்டான்; வேலைக்காரி அவனை வழி அனுப்பிவைத்தாள்.

குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் மருந்து கொடுத்து விட்டு 'கொஞ்சம் ஆபத்தான நோய்தான்; பனி—காற்றுப் படாமல் கவனித்துக் கொள்ளுங்கள்; பார்ப்போம்பிறகு!' என்று சொல்லிப் போய் விட்டார்.

கோமதியின் துயரம் பன்மடங்காயிற்று — இதுவரையில் சரியா கவனிக்காததால் இப்படியாகிவிட்டது என் குழந்தை' என்று கணவரிடம் சீறினள்!

கோகுல் குழம்பியிருந்தான்; தாழை மடலை மேலேயிருந்து தடவினல் முள் குத்தாது; எதிர்ப்புறமிருந்து தடவினல் கை ரணமாகிவிடும்!

கோகுல், கோமதியிடம் எதிர் நீச்சல் போட்டு — இருதயத்தை இன்னும் இரணமாக்கிக் கொள்ள விரும்பவில்லை; 'ஒரு சாதாரணப் பெண்ணுக்குரிய மனக் குமுறல் அது; அதைத் தனது அமைதியினலேயே அடக்கி விடமுடியும்' என நம்பியிருந்தான் அவன்!

பள்ளிக்கூடம் முடிந்து குமார் வீடு திரும்பினன்; கொஞ்ச நாட்களாக வேலைக்காரிதான் அவனை எதிர்வந்து அழைத்துப் போகிறாள்!

இரவு உணவுக்குப் பிறகு அனைவரும் படுக்கைக்குப் போயினர்; கோமதியும் —குழந்தையும் ஒரு படுக்கையில் கோகுல் நாற்காலியில் படுத்தபடி தூங்கினன்.

தூங்காமல் புரண்டு கொண்டிருந்த குமார், மெதுவாக எழுந்தான்; அறையின் மூலைகளெல்லாம் தேடினன்; என்ன தேடுகிறன் இந்த இருட்டில்? அறையில் அவன் தேடியது கிடைக்கவில்லை; வீட்டின் கீழ்ப்பக்கம் போனன் மெதுவாக — அங்கும் தேடினன்; உயரமான பீரோ— அதன்மீது ஒரு நாற்காலியைப் போட்டு ஏறினன்; ஆ—அதோ அவன் தேடியது கிடைத்துவிட்டது—அவனது அம்மா படம்; அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்; படுக்கைக்கு வந்தான்; படத்தோடு — அம்மா படத்தின் பக்கத்திலே படுத்துக்கொண்டான்!

"அந்தக் கட்டிலிலே பாப்பாவும் அதன் அம்மாவும்; இங்கே இந்தக் கட்டிலிலே —அம்மாவும் நானும்''-இப்படி ஒரு வேறுபாட்டு விஷ்நதை அந்த அரும்பின் உள்ளத்திலே தெளிப்பதற்குக் காரணமாக இருந்தது கோமதிதான்!

இல்லை...இல்லை...நோய் வடிவான அவள் பிள்ளைதான்...

கோமதியின் அருகே கிடந்த பாப்பா அழுதது; கோமதி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள், பல நாள் கண் விழித்திருந்த களைப்பு அவளுக்கு!

குமார் எழுந்து பார்த்தான்— —சன்னல்கள் எல்லாம் மூடிக்கிடந்தன; பாப்பாவுக்குக் காற்றில்லை, அதனல் அழுகிறது என்று எண்ணினன்; சன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து விட்டான்!

ஜிலு ஜிலுவெனப் பனிக் காற்று வீசத் தொடங்கியது; பாப்பாவும் அந்தக் குளிர்க் காற்றுப் பட்டதும் மௌனமாக ஆகிவிட்டது; குமாரும, 'நாம் நினைத்து சரிதான்' என்கிற மகிழ்ச்சியில், பாப்பாவைத் தட்டிக் கொடுத்துவிட்டுத் தன் படுக்கைக்குக்குப் போனன். குழந்தைக்குப் பனி கூடாது என டாக்டர் எச்சரித்தது அவனுக்கு என்ன தெரியும் —தூங்கிவிட்டான்!

விடியற்காலை—கோமதி கண் விழித்துப் பார்த்தாள்—சன்னல் திறந்திருந்தது!

"அய்யோ...யார் சன்னலைத் திறந்தது?'' என்று கத்தினள்; கோகுல் திடுக்கிட்டு எழுந்தான்.

"நான்தாம்மா—பாப்பாவுக்குக் காற்று வேணும்னு திறந்தேன்' என்று கூறியபடி எழுந்தோடி வந்தான்குமார்.

கோமதி குழந்தையைத் தொட்டுப் பார்த்தாள்; குழந்தை விறைத்துக் கிடந்தது; அது இறந்து அதிக நேரமாகிறது; முதலில் ஒரு முறை அழுததே — அப்போதே அது போய் விட்டது; ஆனல் குமாரின் தலையிலே பழி விழுந்தது!

அங்கிருந்த ஒரு கூஜாவை எடுத்துக் குமாரின் மீது வீசி எறிந்தாள் கோமதி!

'அப்பா, அம்மா' என அலறினன் குமார்; கூஜா குறி தவறி—அவன் படுக்கையிலிருந்த அம்மா படத்தின் மீது விழுந்தது; படம் தூள் தூளாகப் போயிற்று

குமார், படத்தை எடுத்து முகத்தில் ஒற்றிக் கொண்டு அழுதான்; உடைந்த கண்ணாடித் துண்டுகள், அவன் அழகு முகமெங்கும் கீறி... இரத்தம் கசிந்தது!

கோகுலுக்கு எதை நினைத்து அழுவது என்று புரியவில்லை.

ஃ ஃ ஃ

குமார் இரண்டு, மூன்று நாட்களாகச் சரியாகச் சாப்பிடவேயில்லை; பாப்பாவை குழியிலே வைத்துப் புதைப்பதற்கு அவனல்லவா காரணமாகிவிட்டான்.

இதனை எண்ணி ஏக்கமடைந்தான், கோகுல் எவ்வளவோ முயன்றும் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

"குழந்தை போய்விட்டது— அழுதால் வரப்போகிறதா கோமதி; குமாரைச் சமாதானப்படுத்து—அவன் அப்படியே ஏங்கிவிட்டான் 'என்று தழுதழுத்த குரலிலே வேண்டிக்கொண்டான் கோகுல். எனினும் பயனில்லை; கோகுல் மனப்புயலைத் தணிக்கும் மார்க்கம் தெரியாமல் தத்தளித்தான்; குமாரைக் கூப்பிட்டுச் சாப்பிடுமாறு வற்

[11-ம் பக்கம் பார்க்க]

ஒரு கொள்ளைக்காரனின் கதை!

—: பழனி சித்தார்த்தன் :—

"உயிருடனோ அல்லது பிணமாகவோ மதோசிங்கைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்படும்."

மத்தியப் பிரதேசத்து அரசாங்கம் நீண்ட நாட்களாகவே இம்மாதிரியான ஓர் அறிவிப்பை இடைவிடாது வெளியிட்டு வந்தது; தங்கள் உயிரோடு விளையாட யாரும் விரும்பாததால் அந்தக் கொள்ளைக்காரர்களின் தலைவனைப் பிடிக்கும் முயற்சியில் எவரும் இறங்கவேயில்லை.

கடந்த நானூறு ஆண்டுக் காலமாக சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளைக்காரர்கள் 'தனிக்காட்டு ராஜாக்களாக' வாழ்ந்து வருகிறார்கள். கொள்ளையடிப்பதை ஒரு 'குலத் தொழிலாகவே' தொடர்ந்து அவர்கள் செய்து வருகிறார்கள்.

அவர்களை அடக்குவதற்காக இராணுவமும், காவல் துறையும் துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தும் அடையாத வெற்றியை வினோபா பாவே, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோரின் அன்பு மொழிகள் சாதித்து வருகின்றன.

ஈவு இரக்கம் என்பதையே அறியாது—இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு கொள்ளையடிப்பது—கொலை செய்வது—ஆட்களைக் கடத்துவது போன்றவைகளை 'குல தர்மமாக'க் கடைப்பிடித்து வரும் கொள்ளைக்காரர்களைத் திருத்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் சம்பல் பள்ளத் தாக்கிற்கே போனார்—உயிரைத் துச்சமாகக் கருதி!

அவருடைய அறிவுரைகள், ஒரு தந்தையினுடையதைப் போன்ற பாசமிகு மொழிகள்—எத்தனையோ கொள்ளைக்காரர்களின் இருண்ட சிந்தையில் ஒளிபாய்ச்சி அவர்களைச் சரணடையச் செய்தன.

—அவ்வாறு சரணடைந்தவர்களில் மிகவும் பிரபலமானவன்தான் மதோசிங். உயர்ந்த, மெலிந்த உருவம் படைத்த அவனை யாரும் ஒரு கொள்ளைக்காரன் என்று கூற இயலாது. ஐம்பது வயதான அவன், கொள்ளைக்காரர்கள் பொதுவாக வளர்த்துவிட்டிருக்கும் அடர்ந்த, முறுக்கு மீசைக்கு மாறாக, தன்னுடைய மீசையை அழகாகவும் மெல்லியதாகவும் கத்தரித்துவிட்டிருக்கிறான்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, மதோசிங் ஒரு சிப்பாயாக இராணுவத்தில் பணியாற்றி வந்தான். இளமையிலேயே தன் சுற்று வட்டாரத்து மக்களின் வறுமை நிலையினைக் கண்டு மனங்குமுறி வந்தான்; விடுமுறையின்போது ஒவ்வொரு முறையும் கிராமத்திற்கு வரும்போதெல்லாம், நிலப்பிரபுக்கள் — பணமுதலைகள்—காவலர்கள் ஆகியோரின் சுரண்டல்களையும் தொந்தரவுகளையும் தாங்க இயலாத வெள்ளை மனங்கொண்ட கிராமத்து மக்கள் கள்ளக்குணம் படைத்த கொள்ளையர்களாக மாறிவிடுவதைக் காணத் தவறவில்லை அவன்!

அடக்கப்பட்ட ஏழைகளை ஆவேசங்கொண்ட கொள்ளையர்களாக மாற்றிவரும் அந்த 'எழுச்சி' அவனையும் ஆட்கொள்ளவே, இராணுவப் பணியிலிருந்து வெளியேறி இலக்கன்சிங் என்பவனின் தலைமையில் இயங்கிய கலகக் கூட்டத்தில் ஒருவன் ஆனான்!

"கொழுத்த பணக்காரர்களைக் கொள்ளையடிப்போம்; வறுமையில் வாடும் ஏழையர்க்கு உதவுவோம்......"

—இவ்வாறு கூறும் மதோசிங், தன் வாழ்நாளில் இருநூற்றுஐம்பது தடவைகளுக்கு மேல் காவலர்களோடு மோதியிருக்கிறான்: தொடர்ந்து இருபத்து நான்கு மணி நேரம் வரைகூட அவன் கூட்டத்தாருக்கும் காவலர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்திருக்கிறது; ஆனால், என்றுமே அவன் ஒரு சிறு காயத்திற்குக்கூட ஆளானது கிடையாது!

பொதுவாகக் கொள்ளைக்காரர்கள் ஐந்து மாதங்களுக்கு ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தங்கள் முகாமை மாற்றிக் கொண்டேயிருப்பார்கள்.

அம்முகாம்களுக்கு அவர்களுடைய மனைவிமார்கள் மக்கள், பெற்றோர், உற்றார், உறவினர் வழக்கமாக வந்து சந்தித்துக் கொண்டேயிருப்பார்கள்.

கொள்ளைக்காரர்களின் குடும்பத்தினரில் ஒருவரையோ, அல்லது உறவினர்களில் ஒருவரையோ கைது செய்யவோ, கொல்லவோ காவலர்கள் துணிவதில்லை; அங்ஙனம் துணியும் காவலரின் குடும்பம் பின்னொரு நாள் பூண்டற்றுப் போகும்படியாகப் பழிவாங்கப்படுவது நிச்சயம்!

"காவலர்களைக் கண்டு தாங்கள் அஞ்சியதே கிடையாது; அவர்கள்தான் எங்களைக் கண்டு அஞ்சி வந்தார்கள்!'

—இவ்வாறு கூறும் மதோசிங், ஒருமுறை காலம்சென்ற பிரபல வடஇந்தியத் திரைப்பட நடிகையான மீனாகுமாரியையே கடத்திச் சென்றான்.

சம்பல் பள்ளத்தாக்கிலிருக்கும் ஷிவபுரி என்ற இடத்திற்கு வெளிப்புற படப்பிடிப்பிற்காக வந்தபோது அந்த நடிகையை வெற்றிகரமாகக் கடத்தினான்.

செய்தியறிந்த அந்த மாவட்டத்துக் காவல்துறை 'சூப்பிரண்டெண்ட்' அவனிடம் ஓடோடி வந்து அழாக் குறையாக "நீங்கள் மீனாகுமாரியை எங்களிடம் ஒப்படைக்காவிட்டால் என்னை வேலையிலிருந்தே விரட்டியடித்து விடுவார்கள்' என்று கெஞ்சினார். அந்த அதிகாரி மீது பரிதாபப்பட்ட மதோசிங் நடிகையை 'விடுதலை' செய்தான்.

கடத்திக்கொண்டு வருபவர்களைப் பத்திரமாக வைப்பதற்கென்று கம்பிகள் அடைத்த 'சிறைகள்' கொள்ளையர்களின் முகாம்களில் உண்டு; மதோசிங், ஒருவரைக் கடத்திவந்தால் அவரை மீட்பதற்கு, அவருடைய சொத்தின் நான்கில் ஒரு பகுதியைச் செலுத்த வேண்டும்.

பொய்க்கணக்குக் காட்டி குறைந்த தொகையைக் கொடுத்து யாரும் அவனை ஏமாற்றிவிட முடியாது; ஒருவரைக் கடத்துவதற்கு முன் அவருக்கு இருக்கும் 'அசையும்' சொத்துக்கள், 'அசையா' சொத்துக்கள். வங்கியிலிருக்கும் பணத்தொகை—அனைத்தையும் அவன் தெளிவாக அறிந்துகொள்வான் அவ்வாறு கடத்திக்கொண்டு வரப்படும் நபருக்கு எந்தத் தீங்கும் இழைக்கப்படமாட்டாது; அவர் நன்றாகவே பராமரிக்கப்படுவார்.

ஒருநாள்—

மதோசிங்கின் தலைமையில் இயங்கிய கொள்ளைக்கூட்டம் சில சிறுவர்களையும் சிறுமியர்களையும் கடத்தி வந்தபோது. அவர்களில் ஒரு சிறுவன் நடுவழியில் தரையில் விழுந்து புரண்டு புரண்டு அழுதான்:

"அப்...பா......ஆ...அப்...பா...ஆ..." என்று கதறிக் கதறித் தரையின் மீது கவிழ்ந்து இடைவிடாது நெற்றியால் மோதிக்கொண்டான்!

பால்வடியும் முகங்கொண்ட அந்தச் சிறுவனின் கண்களில் வழிந்தோடிய கண்ணீரையும், தலையிலிருந்து பெருகிய செந்நீரையும் கண்ட மதோசிங்கின் இதயத்தில் வேதனையானது ஒரு அம்பே போல் பாய்ந்து தாக்கியது—

என்ன ஆச்சரியம்—இதயம் என்று ஒன்று இருப்பதையே மறந்திருந்த அந்தக் கொள்ளைக்காரனின் மனத்திரையில் அழுகின்ற சிறுவனின் முகம் மீண்டும் மீண்டும் தோன்றி இராப்பொழுதை தூக்க—மற்றதாக்கியது.

கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான் மதோசிங் — என்ன கொடுமை...... என்ன கொடுமை .....இந்நாள் வரை அவனுடைய வாழ்க்கைப் படகு பிறருடைய கண்ணீர்க் குளத்திலல்லவா மிதந்து வந்திருக்கிறது......

ஆழ்ந்த பெருமூச்சுக்கள், அவன் வேதனையையும் விரக்தியையும் சுமந்து வந்தன; இறுதியாக அவன் தீர்மானித்தான் — 'சரணடைந்துவிடுவது" என்று!

அதற்குமுன் அலைபாயும் மனத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ள வெளிநாடு சென்று சில நாட்கள் தங்கினான்; பிறகு இந்தியாவுக்கு வந்து நேராக வினோபாபாவிடம் சென்று அவர் காலடியில் வீழ்ந்து "நான் சரணடைந்து விட்டேன்...'' என்றான்.

வினோபாபாவே அவனுடைய தோள்பட்டையை அன்போடு பற்றி தன்னருகே அமரவைத்தார்.

சரணடையும் கொள்ளைக் கார்ரர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் தவறியதாலும், தன் திட்டங்களுக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்புத் தர அதிகாரிகள் முன் வராததாலும் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருந்த வினோபாபாவே "நீ போய் ஜெயப்பிரகாஷ் நாராயணனைப் பார்......'' என்றார் அவனிடம்.

மதோசிங் மீண்டும் நேராக ஜெயப்பிரகாஷ் நாராயணனிடம் சென்று அவர் கால்களைப் பற்றிக் கொண்டான்.

தன் காலடியில் விழுந்து கிடப்பவன்தான் பிரபல கொள்ளைக்காரன் மதோசிங் என்பதை அறிந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் உண்மையிலேயே வியப்படைந்தவராய் அவனைப் பார்த்துக் கேட்டார்:

"உன் உயிருக்கு அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலை ஒன்றரை இலட்சம் ரூபாய் என்று தெரிந்துமா அச்சமின்றி நீ என்னைக் காண வந்தாய்?"

அவன் அமைதியாகவும், தெளிவாகவும் "தெரியும்" என்றான்.

அவனைத் தொடர்ந்து அவனுடைய கூட்டத்தாரும், பிரபலமான இன்னொரு கொள்ளைக்காரனான மோஹர் சிங்கும் சரணடைந்தார்கள். எவனும் கொள்ளைக்காரனாகவே பிறவி எடுப்பதில்லை; பசி, தாளமுடியாத வறுமை, ஏற்றதாழ்வுள்ள இச்சமுதாய அமைப்பே கொள்ளைக்காரர் என்றொரு இனம் உருவாகப் பெரும் காரணமாக இருக்கிறது என்பதை மறுப்பதற்இல்லை

திடுக்கிடச் செய்யும் இன்னொரு உண்மை என்னவென்றால்—

சரணடைய முன்வரும் கொள்ளைக்காரர்களைச் சில காவலர்கள் சரணடைய விடாது தடுக்கிறார்களாம்!

ஏனென்றால்—

அவர்கள் சரணடைந்துவிட்டால் கொள்ளையில் தங்களுக்குக் கிடைக்கும் குறிப்பிட்ட பங்குத்தொகை நின்று போய் விடுமல்லவா!

சரணடையும் கொள்ளைக்காரர்கள் குடும்பங்களுக்குச் சில நன்மைகள் செய்வதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்தது; அவ்வாக்குறுதி வெறும் வாய்ப்பந்தல் ஆனது கண்டு வெட்கப்பட வேண்டும்.

உதவித் தொகை—நிலம்—வீடு தருவதாக அரசாங்கம் அறிவித்த சலுகைகளில் ஒன்றுகூடச் சரியாக நிறைவேற்றப்படவில்லை.

லேவா தேவிக்காரர்கள்—பணமுதலைகள் — நிலப்பிரபுக்கள் ஆகியோரின் பேராசைகளுக்கு ஒரு முடிவு கட்டி, கொள்ளைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்காத வரை—

சம்பல் பள்ளத்தாக்கு முழுக்க எதிரொலித்துக் கொண்டிருக்கும் துப்பாக்கிச் சனியன்களின் ஓசை ஒரு நாளும் ஓயப் போவதில்லை!

★★★★★-★★★★★★

நம் நாடு

புதிய சந்தா
விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600018

★★★★★★★-★★★★

ஆரணங்குகளால்வரும் ஆபத்தைத் தவிர்க்க

பீகார் முதல்வரின் புதிய ஏற்பாடு!

வேல்விழி மங்கையரால் செங்கோல் இழந்த மன்னர்களைப்பற்றிய பல கதைகளை நாம் கேட்டிருக்கிறோம்; வனிதையரோடு தொடர்பு கொண்டதால் அமைச்சர் பதவி இழந்த பரிதாபத்திற்குரியவர்களைப் பற்றியும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம்; அண்மையில் பீகாரின் அமைச்சர் ஒருவரையும், ஒரு பெண்ணையும் தொடர்புபடுத்தி 'பரபரப்பான' செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டன.

இந்தத் தொந்தரவுகளையெல்லாம் தவிர்க்க பீகாரின் முதலமைச்சரான கர்பூரி தாகூர் தாம் இனிமேல் கடைபிடிக்கப் போகும் புது முறைகளை வெளியிட்டார்—அவைகளாவன:

மூடப்பட்ட தனித்த அறையில் அவர் எந்தப் பெண்ணுக்கும் பேட்டி அளிக்கமாட்டார்; எந்தப் பெண்ணைச் சந்திப்பதானாலும் பலர் முன்னிலையில்தான் சந்திப்பார்.

குறளும் — குரலும்!

நீலவானத்தின் அழகுக் காட்சி கார்முகில்களால் இருளடைவதுபோல சிலருடைய உள்ளங்களும் பதவி முகில் பரவியதால் பரந்து காணுகின்ற பான்மை இழந்து, குறுகி இருளடைந்துவிடுகின்றன பழைய நினைவுகளை எண்ணிப் பார்க்க மறுத்து — புதிய மனை விமோகத்தில் பெற்று வளர்த்த தாயைப் புறக்கணிக்கின்ற கீழ்மையான குணத்தையும் பெற்றுவிடுகின்றனர். மின்னலின் துடிதுடிப்புப் போல வார்த்தைகளில் நிதானமின்றி மேடை கிடைத்துவிட்டது என்பதற்காக எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்கிற நிலைக்குச் சிலர் கீழிறங்கி வந்துவிட்டனர்.

ஒரு பொய்யையே பல முறை சொன்னால் அது உண்யாகிவிடும் என்ற தவறான கருத்தில் கீறல் விழுந்த இசைத்தட்டுப்போல் செல்லுகின்ற இடமெங்கும் ஊழல் ஊழல் என்று கிளிப்பிள்ளையாக வாய்கிழியப் பேசுகின்றனர். 'கருணாநிதி தண்டனையிலிருந்து தப்ப முடியாது' 'இதோ சிறைச்சாலை தயாராகிவிட்டது'. 'புதிய கம்பிகளாகப் போடப்பட்டுள்ளது' என்று ஒரு மகாமேதை பதவி ஏற்ற நாள் முதல் வார்த்தை ஜாலம் காட்டுகிறார். பாவம், அவருக்கிருக்கும் நெருக்கடி அப்படி! இப்படியெல்லாம் சொல்லித்தானே பதவியைக் காத்துக்கொள்ள வேண்டும்.

'பிறர் முதுகில் இருக்கும் அழுக்கினையே பார்க்கின்றவன் தன் முதுகில் இருக்கும் அழுக்கை நினைக்கமாட்டான்' என்ற நாட்டுப்புற பழமொழியின் உதாரணங்களாகத் திகழ்கின்ற மந்திரக்கோலர்களும், போக்குவரத்துக்களும், செல்விகளும் இனியாவது தங்கள் முதுகுகளைப் பார்ப்பார்களாக! தம் முதுகுகளைப் பார்க்காவிட்டாலும், தம் சகாக்களின் முதுகுகளையாவது பார்க்கட்டுமே...!

பண்டைப் புலவர் உருத்திரங்கண்ணனார் தம் பட்டினப்பாலையில் தர்மசத்திரங்களில் வருவோர்க்கு உணவளிப்பதற்காக வடிக்கப்படுகின்ற சோற்றுக் கஞ்சி மதருக்களில் ஓடி; தெருவெல்லாம் சேறாகியது என்றுதான் பாடியிருக்கிறார். ஆனால், நம் 'புனித புத்தருடைய ஆட்சியிலே கள்ளச்சாராயம் சே! சே! யார் சொன்னது கள்ளச்சாரயம் என்று!

- கருமலை -

நல்லச் சாராயம் மாவீரன் தலைமையிலே மாநகராட்சித் தெருவெல்லாம் ஓடவைத்துப் படைக்கின்ற புதுக் காவியத்திற்குப் புகழ் சேர்க்கின்றார்.

கலைஞர்தான் அனாதைக் குழந்தைகளுக்காக, அனாதை இல்லங்கள் அமைத்து வாழ்வளித்தாரா? ஏன் எங்களால் முடியாதா? இதோ அனாதையாக இருக்கின்ற புறம்போக்கு நிலங்களிலெல்லாம் கட்சி அலுவலகம் என்ற பெயர் பலகை மாட்டி, வீணாகக் கிடந்தவற்றிற்கு வாழ்வளிக்கிறோமே என்கிறார்கள், தம் குருவைப் போலவே இரக்கச் சிந்தை மலிந்த சீடர்கள்.

'வட்டங்களும், மாவட்டங்களும் குட்டி ராஜ்யங்கள் நடத்தின' என்று புட்டி போட்ட வாயால் ஆவேசத்தோடு சந்துமுனைகளில் சிந்து பாடும் மகா உத்தமர்களே, 'கிணத்துக் கடவு காவல் நிலைய' அத்துமீறல்கள் எந்த வட்டத்தின் திருவிளையாடல்?

'வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே' என்ற பாரதியாரின் பாடலைப் பலமுறை படித்துப் படித்துப் பார்த்தேன், பொருள் விளங்கவில்லை. போர்க்களத்தில் வாளால் வீரம் காட்டலாம், குத்துச் சண்டையில் கைகளால் வீரம் கார்ட்டலாம். ஆனால், வாயால் எப்படி வீரம் காட்டுவது? பாரதியார் மறதியாக மாற்றி எழுதிவிட்டாரா என்று நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தேன். எனக்குப்பொருள் புரியவேண்டும் என்பதற்காகவோ அல்லது என்னைப் போலத் தவித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்களின் தவிப்பினைப் போக்குதற்கோ; மேடையிலே மாண்புமிகு மந்திரக்கோலர், 'என் மாளிகையை மூன்று இலட்சத்திற்கு வாங்க இந்தக் கருணாநிதி தயாரா? என வீர முழக்கமிட்டார். உடனே தலைவர் கலைஞர் 'பத்திரங்களை அனுப்பி வை' என்று கூறினார். பாவம், அதற்குப் பின்னால் அவரின் மூச்சையே காணோம்.

'சர்க்காரியாவும், சாமிக்கண்ணுவும், கருணாநிதியின் இரு கைகளிலும் இரு விலங்குகளை மாட்டி ஊர்வலம் விடப் போகின்றார் பார் பார்' என்று தெருவித்தை காட்டுகின்ற பாம்பாட்டி, 'கீரிக்கும் பாம்பிற்கும் இதோ சண்டைவிடப் போகிறேன்' என்று சொல்வதைப்போல் செல்வியார் பேசுகின்ற கூட்டத்திலெல்லாம் கூறி வந்தார். பேசுவதுதான் பேசினாரே கிண்டிக்குப் பக்கத்திலா பேசவேண்டும்! குதிரைக்கே பொறுக்கவில்லை.

பாவம், அம்மையாரின் நேர்மைத்தன்மை சட்டமன்றத்தில் புகைப்படமாகச் சிரித்த பின்பு இதுவரை வாய் திறக்கவேயில்லை.

இதையெல்லாம் பார்க்கும் பொழுது வள்ளுவரின் குறள் ஒன்று நினைவிற்கு வந்தது. ஆகா! வள்ளுவர்தான் எத்துணை முன் அறிவோடு இக்குறளை எழுதியுள்ளார்.

"என்ஐமுன் நில்லன்மின்
தெவ்வர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின்ற வர்!"

இதன்பொருள் :—'பகைவர்களே! என் தலைவன் முன்னால் நிற்காதீர்கள்; ஏனென்றால், முன்பு என் தலைவன் முன் நின்றவர்கள் அவரின் வாளால் உயிரிழந்து இப்பொழுது கல்லாக நிற்கின்றனர். ஆகவே, நீங்களும் உங்களின் உயிரினைக் காக்க வேண்டுமென்றால் அவரின் எதிரே நிற்காதீர்கள்!'

இந்த அருமையான குறளை யாராவது சித்தபிரமை பிடித்து முரண்பாட்டின் மொத்த உருவமாக இலங்குகின்ற முதல்வருக்குக் காட்டுங்கள். மந்திரக்கோலரும், செல்விகளும் தலைவர் கலைஞர் முன் அடிபட்டுக் கல்லாக ஆனதுபோல நீங்களும் ஆக வேண்டாம் எனச் சுட்டிக் காட்டுங்கள். ★

நடிப்பவரும் - துடிப்பவரும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

குறைப்பதுண்டு — ஏருழவன் வேலைச் சுமையைக் குறைப்பதற்கு "டுப்" போட ஆள் இல்லை. விவசாயியாக வேடமிடுவோனுக்கு வேண்டுமானால் "டுப்" கிடைக்கலாம்— உண்மையான உழவனுக்கு வேலைச் சுமையினின்று விடிவே இடையாது. இயந்திரமயமானால் சுமை குறையலாம். ஆனால் இயந்திரமயமாக்கப் பட்டால் வேலையற்றோர் தொகை கூடும். இதனால்தான் கட்டை வண்டியுகத்திலும் கைராட்டையுகத்திலும்குழம்பியபடி இன்னமும் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

விடிவேயில்லை என்று திகைத்துக்கிடந்தால் விடுதலையே கிடையாது. முளைத்துள்ள சிக்கலுக்கு முடிவு கண்டாக வேண்டும். வேலையற்றோர்க்கு வேலை — வேலைச்சுமை உள்ளோர்க்கு வேலைக் குறைப்பு — என்ற இரண்டு திட்டங்களும் ஈடேறியாக வேண்டும்.

கல்வி முதியோரோடு வேலை வாய்ப்பில் இளைஞர்கள் போட்டியிடுவதை தாமதப்படுத்த உதவுகிறதென்று ஒரு சார் அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கல்வியே பிற்காலத்தில் முதியவர்களோடு தொழிலில் இளைஞர்கள் போட்டியிடத் துணை செய்கின்றன என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால், கற்ற கல்விக்கேற்ற வேலையைச் செய்யாமல் — வேலை கிடைக்காமல் தேடிய அறிவைப் பாழாக்கும் கொடுமை தீர வழியுண்டோ? பயன்படக்கூடிய கல்வியை இந்நாட்டில் நல்கி இருக்கின்றார்களா? அல்லது பெற்ற கல்வியினை பயன்படுத்தும் வேலை வாய்ப்புத்தான் ஒழுங்காக வழங்கப் பெற்றுள்ளதா?

ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் எண்ணிப் பார்க்க இதுபோல் எத்தனையோ கேள்விகள் இருக்கின்றன. ஓய்வெடுத்துக் கொள்ளவும் உல்லாசம் தேடவும் பதவியில் அமரும் பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் எண்ண முடியாது. ஓயாமல் ஒருவன் உழைத்தால்தான் நாட்டிலே எண்ணற்ற சிக்கல்கட்கு ஏற்ற விடை கிடைக்கும். இதனைச் செய்யாமல் இன்ப விளையாட்டுக்களுக்காக நேரத்தை ஒதுக்க யாரேனும் நினைத்தால் அவர்கள் காலம் காலமாக இந்த மண்ணின் தூற்றலுக்கு இலக்காக வேண்டியோரே!

ஆட்சியைத் துறந்துவிட்டு ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளப் போனால் யாரும் தூற்றப் போவதில்லை. மண்ணின் மைந்தர்கள் மனக்கவலைப் படும்போது மகிழ்ச்சிக்கான மார்க்கம் தேடி ஆட்சிக்கோல் ஏந்தியவர் ஒடுவதைத்தான் பொறுத்துக் கொள்ள முடியாத அக்கிரமம் என்கின்றோம்.

விளக்கத்தை வெறுத்து— ஏற்றுக்கொள்ள மறுத்து — கூத்தடிக்கும் நிலைப்பிலே கோமாளி ஆள்வது தொடர்ந்தால் சாலை ஓரத்து வேலையற்றதுகளின் மனத்தில் வளரும் விபரீத எண்ணங்கள் இவ்வாட்சியை சாய்க்கும் புயலாக — பூகம்பமாக மாற அதிக நாள் பிடிக்காது. ★

பகலில் 'யோகி' இரவில் 'போகி'

'தியாகி' என்று தன்னைத்தானே விளித்துக் கொள்ளும் பெங்களூர் வாழ் 'குட்டி சாயிபாபா' ஒருவர், பக்தர்களுக்குத் 'தரிசனம்' தர பம்பாய் சென்றார்.

பம்பாயிலிருக்கும் கோவில் ஒன்றில் தங்கிய 'சுவாமிஜி' தன்னைக் காணவரும் பக்தர்களிடமிருந்து காணிக்கையாக ஏராளமான பணத்தைத் திரட்டினார்.

மாலை ஆறு மணிக்குமேல் அந்தக் 'கடவுள் அவதாரத்தைக்' காண யாருமே அனுமதிக்கப்படுவதில்லை. அந்தி சாய்ந்த பிறகு 'சுவாமிஜி' கோவிலில் தங்குவதே இல்லை என்பதை எப்படியோ தெரிந்துகொண்ட பக்தர்களில் ஒருவன், அவர் எங்கு செல்கிறார் என்ன செய்கிறார் என்பதை அறிய ஆவல் கொண்டவனாக அவருக்குத் தெரியாது அவரைப் பின்பற்றிச் சென்றான்.

பக்தன் 'துப்பறிந்து' கண்டுபிடித்த விவரம் இதுதான் ;—

இருட்டிய பிறகு கோவிலைவிட்டு வெளியேறிய 'சுவாமிஜி' நகரத்தின் ஒதுக்குப்புறமான பகுதியிலிருந்த ஆடம்பரமான பங்களா ஒன்றினுள் நுழைந்தார் ; எழிலும் இளமையும் ஒருசேரப் பெற்ற மங்கையொருத்தி அவரை அன்போடு வரவேற்று படுக்கை அறைக்கு இட்டுச் சென்றாள்.

'காயமே இது பொய்யடா...' எனக் கதையுரைக்கும் 'சுவாமிஜி' இரவு முழுக்க அம்மங்கையோடு இன்பக் கேளிக்கைகள் புரிந்துவிட்டு பக்தர்களிடம் வசூலித்த பணத்தை அவளிடம் பெற்ற இன்பத்திற்கு ஈடாகத் தந்துவிட்டு விடிந்த பிறகு பங்களாவைவிட்டு 'முக்காடு' போட்டபடி வெளியேறினார்.

அரும்பு....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

புறுத்தினுன்— அவன் மறுத்தான்; மனைவியின் மீதுள்ள ஆத்திரத்தைக் குழந்தை மீது காட்டவேண்டுமென்ற முறைப்படி, குமாரின் கன்னத்திலே கோகுல் ஓங்கி ஓர் அறை கொடுத்துவிட்டு விர்ரெனப் பறந்து விட்டான், அலுவலகத்துக்கு!

"அப்பா ஏன் என்னை அடிக்க வேண்டும்?"—விடை காண முடியவில்லை அந்த பச்சைப் பாலகனுல்; பேசாமல் எழுந்து பள்ளிக்கூடம் போய் விட்டான்!

பத்திரிகை அலுவலகத்தில் கோகுலுக்கு வேலை ஓடவில்லை; மாலை ஆறு மணி ஆகியும் நினைத்த கட்டுரையை எழுதி முடிக்க இயலவில்லை; மனநிம்மதி அல்லவா எழுத்தாளனுக்கு முக்கிய மூலதனம்?

தொட்டுத் தொட்டு வளர்த்த தன் அருமைச்செல்வத்தை அறைந்து விட்டதை நினைத்து நினைத்து வெதும்பினுன்; அவன் முதல் மனைவி அவன் எதிரே வந்து காலை பிடித்துக்கொண்டு அழுது 'இனிமேலாவது நம் செல்வத்தை இப்படி அடிக்காதிர்கள்' என்று கெஞ்சுவது போல் இருந்தது!

அப்போது தொலைபேசியில் மணி அடித்தது—பேசினுன்; குமார் பள்ளிக்குப் போனவன் திரும்பவேயில்லை; பள்ளிக்கூடத்திலும் இல்லை' என்று வேலைக்காரன் தகவல் கொடுத்தான்.

கோகுலுக்குத் தலைசுழன்றது; அறையை விட்டு வெளியே ஓடி வந்தான்; குமார்' என்று கத்தியபடி மாடிப்படியிலே காலை வைத்தான்;

உலகமே இருண்டுவிட்டது போன்ற உணர்ச்சி—கண்களிலே பயங்கரமான சுழற்சி—அவனுடைய கால் இடறியது — கடகடவெனப் படிகளிலே உருண்டான்! மாடிப்படி முழுதும் இரத்த வெள்ளம்

ஃ ஃ ஃ

மருத்துவமனையிலே கவலைக்கிடமான நிலையிலே கோகுல்! இதைக் கேட்ட கோமதி, அலறித் துடித்துக் கொண்டு ஓடிவந்தாள்; அவளை யாரும் உள்ளே அனுமதிக்கவில்லை — வெளியிலேயேஉட்காரவைத்துவிட்டார்கள்; கோகுலுக்கும் பிரக்ஞையே வரவில்லை. இன்னும் பத்து நிமிடத்திலே பிரக்ஞை வந்தால்தான் பிழைப்பான் இல்லாவிட்டால் பிழைக்கமாட்டான்' இப்படித்தகவல் தரப்பட்டது அவளுக்கு!

தன்னுலேயே — தன்னுடைய நடத்தையினுலேயே தன் கணவனுக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை அவள் உணர்ந்தாள்!

அவளை அறியாமலே, கணவன் மீது அவளுக்குள்ள அன்பு புதுப்பிக்கப்பட்டது!

அவள் அமர்ந்திருந்த அருகே உள்ளமரத்திலிருந்து தழைதன் உதிர்ந்தன. அது கண்டு அலறினுள்; அந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த இரு புறுக்களில் ஒரு புறு எழுந்து பறந்தது; அதைப் பார்த்து, 'ஓ' வெனச்சப்தமிட்டாள்!

அந்தநேரத்திலேதன்னை அடித்ததற்கு காரணம் கேட்க அப்பாவின் ஆபிசுக்குப்போய் அங்கே சேதி கேள்விப்பட்டு ஆபிஸ் பியூன் உதவியோடு ஆஸ்பத்திரிக்கு வந்த குமார் அம்மா அழுதுகொண்டிருப்பதைப்பார்த்து அவளிடம் ஓடிவந்தான் 'குமார் அப்பா ஏமாற்றி விடுவார்போலிருக்கேடா' என்று அவனை அணைத்துக்கொண்டு விறிட்டுக்குக் கதறினுள் கோமதி!

"அழாதேம்மா". என்று அவள் கண்களைத் தன் கொழுந்துக் கையால் துடைத்தது அந்த அரும்பு!

'பாரடா ராஜா நமக்கு இனிமேல் ஆதரவு'' என்று விம்மினுள்! அவள் மனக் கண்முன்னே, அம்மனூர் குடிசையில் கோகுலின் காலைப் பிடித்துக் கொண்டு ஆதரவு கோரி'' அந்தக் காட்சி தோன்றி மறைந்தது!

"பயப்படாதேம்மா — நான் பெரியவனு ஆகி உன்னைக் காப்பாத்துவேன் — பயப்படாதேம்மா" என்று அவளது முகவாய்க்கட்டையைப் பிடித்துக் கொண்டு குமார், தேம்பித் தேம்பி அழலானுன்!

அந்தப் பசலையின் ஆதரவு மொழி, அவளுடைய குறுகிப் போன இருதயத்தை விசாலமாக்கி விட்டது! தாய்மை உணர்ச்சி, பிள்ளையைப் பெறுலுல்தான் வர வேண்டுமா? பெண் குலத்தின் சொத்தாயிற்றே அது! உணர்ச்சி, கோமதியின் உள்ளத்திலே இருந்து பீறிட்டுக் கிளம்பி – குமாரைத் தழுவிக் கொண்டது!

இருவரும் கன்னத்தோடு கன்னம் ஒட்டிக் கொண்டனர். அம்மாவின் படத்திலே இருந்த கண்ணுடித் துண்டு கள் கிழித்த கீறலின் தழும்புகளைக் கோமதியின் கண்ணீர் கழுவிக் கொண்டிருந்தது!

நர்ஸ் ஓடிவந்தாள் — கோமதி திடுக்கிட்டாள்!

"கோகுல் பிழைத்துவிட்டான்! என்ற இன்பச் சேதி கிடைத்தது — குமாரும் கோமதியும் உள்ளே ஓடினுர்கள்!

கோகுல், கோமதியின் இடுப்பிலே உள்ள குமாரைக் கண்டான்-- உண்மையாகவே இப்போது அவன் பிழைத்து விட்டான்!

'அரும்பைப் பாதுகாக்கும்இரு இலைகளும் உதிர்ந்துவிடுமோ' என்ற நிலை இருந்தது; இப்போது மீண்டும், இரு இலை— ஒரு மொட்டு' என்று ஆகி விட்டது!

இந்தப் புதிய ஆரம்பம், இனி, 'இரு இலை—இரு மொட்டு' என்று ஆவதற்கான இன்பத்தின் தொடக்கமாகவும் இருந்தது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபுரம், நசரத்பேட்டை அஞ்சல், பூவிருந்தவல்லி வழி-சென்னை — 56

மாவட்டப் பிரதிநிதிகள்:

டி இராஜரத்தினம், 13, மேட்டுத் தெரு கன்டோன்மென்ட்டு, பூவிருந்தவல்லி, சென்னை — 56.

அ. ப ஏழுமலை, 5-30, சான்றோர்வீதி, அணைக்கட்டுச்சேரி, சோராஞ்சேரி அஞ்சல், பட்டாபிராம (வழி)

தி. ரா. மாசிலாமணி, 9, அம்மன்கோயில் தெரு உடையவர் கோயில் அஞ்சல், திருமழிசை. சென்னை —56.

எல்லாபுரம் ஒன்றியம்

செயலாளர்,

ஏ. டி. வேலு, 47, அறிஞர் அண்ணு நகர். ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் வட்டம். செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள்:

க. கெங்காதரன், பூச்சி அத்திபேடு அஞ்சல், திருவள்ளூர் வட்டம். செங்கற்பட்டு.

பி. டி. முத்துவாப்பா. பெரியபாளையம் அஞ்சல். திருவள்ளூர் வட்டம், செங்கற்பட்டு.

எம். மோகனசுந்தரம், திருநிலை கிராமம் பனையஞ்சேரி அஞ்சல், திருவள்ளூர் வட்டம், செங்கைமாவட்டம்.

ஆர் கே பேட்டை ஒன்றியம்

செயலாளர்.

பூ கன்னியப்பன், சஞ்சீவிபுரம். இ. எம். ஆர். கண்டிகை அஞ்சல். (வழி) வங்கனூர் (6311304) திருத்தணி தாலுக்கா, செங்கை மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள்:

கே. நரசிம்மன், வங்கனூர் எல் ஒ. (631304) திருத்தணி தாலுக்கா, செங்கை மாவட்டம்

ஊரப்பன், புந்தேரி, சானூர் மல்லாவரம் அஞ்சல், (வழி) எறும்பி, செங்கை மாவட்டம்.

ஏசுதாஸ் வீரமங்கலம் காலனி வீரமங்கலம் அஞ்சல், (வழி) எறும்பி. செங்கை மாவட்டம்.

தாம்பரம் நகரம்

செயலாளர்.

வி கன்னியப்பன் 14. மூன்றுவது தெரு ரெட்டியார் பாளையம் முடிச்சூர் ரோடு, மேற்கு தாம்பரம். சென்னை-45

மாவட்டப் பிரதிநிதிகள்:

டேனியல் பீட்ஸ், கிழக்கு தாம்பரம், சென்னை — 600 059.

வி. பழனி 46 வ. உ. சி. தெரு. கஸ்தூரிபாய் நகர், மேற்குத் தாம்பரம், சென்னை — 600 045.

அம்பத்தூர் நகரம்

செயலாளர்:

பா. இரவைக்கண்ணன் 28 யாதவ தெரு பட்டரைவாக்கம் சென்னை — 600 098

மாவட்டப் பிரதிநிதிகள்:

எம் சி சந்ரன் 162 முகப்சுபேர் சாலை முகப்பேர் அஞ்சல் சென்னை — 600 050

அ. கோ. தாமோதரன். 6, பஜார் தெரு. வரதராசபுரம் அம்பத்தூர் சென்னை- 53

பெ. துரைசிங்கம், 1பாண்டுரங்கபுரம், பாடி. சென்னை — 600 050

ஆலந்தூர் நகரம்

செயலாளர்;

ம. ஆபிரகாம் 49 அப்பாவு முதலிதெரு, ஆலந்தூர், சென்னை — 16

மாவட்டப் பிரதிநிதிகள்,

மு. முகாதேவன், 26, இரண்டாவது பாரதி தெரு. பழவந்தாங்கல் சென்னை — 61

எஸ். மதுரை, 2, ஜால் நாயக்கன் தெரு. ஆலந்தூர், சென்னை - 16

ஆர். எஸ். பாரதி, ஏகாம்பர டபேதார் தெரு, ஆலந்தூர், சென்னை — 16

பல்லவபுரம் நகரம்

செயலாளர்,

கே என். சலிம். 12 அசேன் பாஷா தெரு, பல்லவபுரம், சென்னை —43

மாவட்டப்பிரதிநிதிகள்:

பி மொ. சாகுல் அமீது, 10, நாயிடு ஷாப் ரோடு, ராதாநகர், குரோம்பேட்டை சென்னை - 44

கே. சிவானந்தம், ஜி எஸ். டி ரோடு, குரோம்பேட்டை, சென்னை - 44

செங்கற்பட்டு நகரம்

செயலாளர்

வ. பசுபதி, 101, அண்ணு சாலை செங்கற்பட்டு,

மாவட்டப் பிரதிநிதிகள்;

தா. கோவிந்தராசன், 67, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, செங்கற்பட்டு.

செ. கோ. விசுவநாதன், 219, காந்திசாலை, செங்கற்பட்டு.

கத்திவாக்கம் நகரம்

செயலாளர்:

இ. வீரராகவன். 3, 6-வது தெரு, காமராசர் நகர், கத்திவாக்கம், எண்ணூர், சென்னை — 600 057

மாவட்டப் பிரதிநிதிகள்;

ப. பாலகிருஷ்ணன், 97, நரசிங்கன் வீதி 13 வது தெரு சத்தியவாணிமுத்து நகர், கத்திவாக்கம், எண்ணூர். சென்னை — 600 057

ஆவடி நகரம்

செயலாளர்;

க. மு. பாபு, 75 அறிஞர் அண்ணு நெடுஞ்சாலை. பட்டாபிராம, சென்னை - 600 072

மாவட்டப் பிரதிநிதிகள்:

ஏ. சி பானு; 28 கவரப்பாளையம் ஆவடி, சென்னை-54

ஜீவரத்தினம், 38 பெரியார் சாலை. திருமுல்லைவாயல், சென்னை — 600 062

பெ. கோவிந்தன், 54 பேட்டை கிராமம், பாலவேடு போஸ்ட், ஏ ஐ.எப் ஆவடி, சென்னை — 55

ஏ. வரதன், தண்டரை, பட்டாபிராம் அஞ்சல், சென்னை — 600 072

இ. ஜே. ஆல்பர்ட், இன்ப நிலையம், பாரதிதெரு, காமராசர், நகர் சென்னை-600 071

திருவொற்றியூர் நகரம்

செயலாளர்

டி. கே. பழனிசாமி 28-1 நடபாய் தோட்டம் தெரு. திருவொற்றியூர், சென்னை — 19

மாவட்டப் பிரதிநிதிகள்:

மா. வெ. நாராயணசாமி டி. எஸ். ஆர். நகர் திருவொற்றியூர் சென்னை — 19

எம். லோகநாதன், 228 திருவொற்றியூர் குப்பம், அப்பர் நகர் சென்னை —19

பி. கோவிந்தன், 12 செட்டி தெரு. காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை—19.

பேரூர் கழகச் செயலாளர்கள்

பரங்கிமலை ஒன்றியம்

பொ. தனசேகரன். செயலாளர், வேளச்சேரி பேரூர் தி.மு க. 2, காமராசர் தெரு, வேளச்சேரி— 600 042.

மா. வரதன் செயலாளர், அனகாபுத்தூர் பேரூர் தி. மு.க. 50, காமராஜ் சாலை அனகாபுத்தூர் — 600 070.

நா. ஆ இரங்கசாமி, செயலாளர், பம்மல் பேரூர் தி மு.க 18 பஜனை கோவில் தெரு, நாகல்கேணி, பம்மல் 600 044.

அ ராம. கருப்பையா செயலாளர், சாலிக்கிராமம் பேரூர் தி. மு. க. 15 விசயராகவபுரம், 4-வது தெரு, சாலிக்கிராமம்— 600 093.

சொ. துரை சண்முகம், செயலாளர். திருவான்மியூர். பேரூர் தி. மு. க 57. திருவீதியம்மன் கோவில் தெரு, திருவான்மியூர்—800 041.

குன்றத்தூர் ஒன்றியம்

தா. மோர்கலிங்கம், செயலாளர். குன்றத்தூர் பேரூர் தி மு. க. 26 துலுக்கத் தெரு, குன்றத்தூர் — 600 069.

வில்லிவாக்கம் ஒன்றியம்

கோ கருணுகரன் செயலாளர். வில்லிவாக்கம் பேரூர் தி. மு. க. 104 எம். டி. எச் ரோடு. வில்லிவாக்கம் 600 049

பூவிருந்தவல்லி ஒன்றியம்

ஆர். எஸ். இராதாகிருட்டிணன், செயலாளர் பூவிருந்தவல்லி பேரூர் தி. மு க. 1 சுவரைத் தெரு, பூவிருந்தவல்லி 60056

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது கூலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணு மடம்சாலை, சென்னை-28

திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

காட்டூர் கோபால் அறிக்கை:

போக்குவரத்து தொழிலாளர்களின்

கோரிக்கை வெற்றி

வேலைநிறுத்தப்போராட்டம் திரும்பப் பெறப்பட்டது

—தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச்செயலாளர் காட்டூர்கோபால் விடுத்துள்ள அறிக்கை விவரம் வருமாறு:

போக்குவரத்து ஊழியர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகளில் நியாயம் வழங்குவதில் அரசின் அசட்டையான போக்கு தடையாக இருந்ததோடு, சமரசம் பேச அழைத்திட்ட பொறுப்புள்ள அமைச்சரே சண்டையை மூட்டி ஆத்திரம் ஏற்படுகிற வகையில் பேச்சு வார்த்தையை நடத்தியது, தொழிலாளர்களை வேலை நிறுத்த நடவடிக்கைக்கு நிர்ப்பந்தப்படுத்தியது.

பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டு அதனால் பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படக்கூடாது என்பதில் எச்சரிக்கையோடு இருந்து எப்படியாவது இணக்கமான முடிவு ஏற்பட வேண்டுமென்று ஐக்கியக் குழுவின் சார்பில் எவ்வளவோ முயன்றும் பஸ் ஊழியர்கள் மீது வேலை நிறுத்த நடவடிக்கை திணிக்கப்பட்டது என்பது தான் உண்மையான நிலைமையாகும்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது

15—5—78 அன்று இரவில் அவசரச் சட்டத்தை பிரகடனப்படுத்தியது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துவிட்டது.

தொழிலாளர்கள் பொருளாதாரக் கோரிக்கை காரணமாக நடத்துகிற வேலை நிறுத்தப் போராட்டத்தை தடை செய்து அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தியது அடிப்படை உரிமைகளின் குரல்வளையை நசுக்குவதாகும்.

தொழிலாளர் வர்க்கம் சீறி எழுந்தாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை மறுநாள் காலை ஏற்பட்டிருந்தது. என்றாலும் தொடர்ந்து பேசி இறுதிவரை பேச்சுவார்த்தை மூலமாகவே முடிவு காண்பதற்கு கூட்டு நடவடிக்கைக் குழுவினர் எடுத்துக்கொண்ட தொடர் முயற்சிகளின் காரணமாக இன்று இணக்கமான முடிவு ஏற்பட்டுள்ளது. இது எதிர்க்கட்சிகளுக்கு—குறிப்பாக தி. மு. கழகத்திற்குத் தூண்டிவிடுகிற எண்ணம் இல்லாத கொள்கையுடையது என்கிற உண்மை நிலைக்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அரசாங்கத்திற்கு எப்படியும் தொல்லை கொடுத்தாக வேண்டுமென்கிற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லை என்கிற உண்மை தெள்ளத் தெளிவாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அணுகுமுறை சரியற்றதாகத் தொடர்ந்து இருந்து வந்தாலும் இணக்கமான முடிவு காண்பதற்கு தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவினர் மேற்கொண்ட மாக்கான பொறுப்புணர்ச்சி காரணமாக அமைந்துள்ளது.

"பரவாயில்லை" என்கிற நிலை வந்தது ஏற்றுக்கொண்டோம். பெற்ற வெற்றிக்கு தொழிலாளர்களின் ஒன்றுபட்ட நடவடிக்கைதான் முக்கிய காரணமாகும்.

16—5—78 அன்று நள்ளிரவு முதலாகத் துவங்க இருந்த பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டதால் பொதுமக்கள் தொல்லைகளுக்கு உள்ளாவதும்—தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் தவிர்க்கப் பட்டதற்கு துணை நின்ற அனைத்துக் கரங்களுக்கும்—இறுதியிலாவது இணக்கமான முடிவுகளுக்கு ஒப்புக்கொண்டதற்காக அரசுக்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை சார்பில் மகிழ்ச்சியினையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரிந்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும், செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: **சக்தி. ஜி சம்பந்தன்**
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

புருஷன்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அனுப்பி வைத்தார். அவர்களில் மிக முக்கியமானவன் செண்பகஞ் சேர்வை இப்போதுள்ளதுபோல் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய கொத்தனார்கள் வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. எந்தக் கொத்தனுருக்கும் சொந்த வீடு கிடையாது. ஒவ்வொரு கொத்தனும் சாந்துச் சட்டியையும் பூச்சுக் கரண்டியையும் கையில் வைத்துக் கொண்டு மதுரை மேலக் கோபுர வாசலில் நிற்பார்கள். தேவைப்பட்டவர்கள் அவர்களைக் கூட்டிக் கொண்டு போவார்கள். இதுதான் அந்தக் காலத்து மதுரைக் கொத்து வேலைக்காரர்களின் வாழ்க்கை நிலை.

செண்பகச் சேர்வை சிறந்த கொத்து வேலைக்காரர் தான் ஒரு காலத்தில் சித்திரைத் தேர், வண்டியூர் தெப்பம் எல்லாம் கூட அவனது சிங்கார வேலைப்பாடுகளுடன் தான் உலா வந்திருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் அவன் உள்ளச் சோர்வால் விரக்தியடைந்து விட்டான்.

அணையில் சேர்வைக்குத் தினக் கூலி மூன்று ரூபாய் என்று முடிவானது. நிரந்தரமாக ஒரு வேலை கிடைத்ததில் அவனுக்கு மனச் சாந்தி ஏற்பட்டிருந்தது உண்மைதான்! ஆனால் அந்தச் சாந்தி அவனது இதயம் முழுதும் பரவியிருக்கவில்லை. இருளை அகற்ற ஊதுபத்தி வெளிச்சம் உதவுமா?

குருவம்மாவையும், சக்குவையும் தனிமையில் வைத்து விட்டு எப்படி அணைக் கட்டு வேலைக்குப் போவது என்ற கவலைதான் சேர்வையின் உள்ளத்தில் மேலோங்கி நின்றது.

எல்லாம் அங்கையர்க்கண்ணி கிருபைதான் என்று ஒரு வழியாக மதுரை மீனாட்சி அம்மனின் மீது பாரத்தைப் போட்டு விட்டு செண்பகஞ் சேர்வை அணைக்குப் போகத் தயாரானான். மகளிடமும் பேத்தியிடமும் விடைபெறும் போது அவன் கண்கள் கலங்கி விட்டன. தாயை விட்டுப் பிரியும் சிறுவர் சிறுமியரைப் போல் செம்பகஞ் சேர்வை, குருவம்மாவையும் சக்குவையும் விட்டுப் பிரியும்போது தேம்பித் தேம்பி அழுதான்.

வாழ்க்கையில் மனிதனது ஒவ்வொரு குணத்திற்கும் பருவம் கால வரம்பு இருந்தாலும் பாச உணர்ச்சிக்கு மட்டும் இந்தக் காலக்கெடு இல்லை. இருந்திருந்தால் முன்கோபத்திற்கு இளமைப் பருவம், முடி நரைப்பதற்கு முதுமைப் பருவம் என்று சொல்லி வைத்த மானிட இயல் அறிவாளர்கள், மனிதனது ரத்தபாச உணர்ச்சி அற்றுப் போவதற்கான பருவத்தையும் சொல்லியிருப்பார்களே!

—தொடரும்



திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு. இராயபுரம். சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.